வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 31.03.2022 வியாழக்கிழமை | இதழ் : 116 | பக்கங்கள் : 16

# 15 மணித்தியாலம் வரை மின்வெட்டு நீடிக்கலாம்!

## மின்சார பொறியியலாளர் சங்கம்

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் நெருக்கடி மற்றும் வறட்சி காரணமாக, நாளாந்த மின்தடை 15 மணித்தியாலங்கள் வரை நீடிக்கக்கூடும் என்று மின்சார பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிலநேரம், எதிர்காலத்தில், மின்துண்டிப்பு நேர அட்டவணைக்கு பதிலாக, மின்விநியோக நேர அட்டவணையை வெளியிடுவது இலகுவானதாக இருக்கும் என்று கொழும்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். 15



## முறிகண்டி பகுதியில் விபத்து பிரதேச சபை ஊழியர் மரணம்!

### மூன்று பேர் படுகாயம்

முல்லைத்தீவு, மார்ச் 31

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டிப் பகுதியில் ஏற்பட்டவிபத்து சம்பவத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கழிவகற்றும் உழவு இயந்திரத்தின் பின் பகுதியில் அதே திசையில் 15

## பாராளுமன்றத்தை கலைக்கும் யோசனை மே மாதம் வருகிறது

### கூறுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, மார்ச் 31

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்லுமாறு வலியுறுத்தும் பிரேரணையை முன்வைக்க தயாராகி வருகின்றோம் - என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தை இரண்டரை வருடங்களுக்கு பிறகே ஜனாதிபதியால் 15

## 2 இலட்சம் தொட்டது தங்கம்; ஆனால் விற்பதற்கு இல்லை!

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 2 இலட்சம் ரூபாயாக நேற்று அதிகரித்தது.

இதேநேரம், கொழும்பு செட்டியார்தெரு தங்க சந்தையில் தற்போது தங்கத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று 24 கரட் தங்கம் ஒரு பவுண் இரண்டு இலட்சம் ரூபாயாகவும் 22 கரட் தங்கம் ஒரு பவுண் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டது. 15

## இன்று 13 மணி நேர மின்வெட்டு அமுல்!

கொழும்பு, மார்ச் 31

இன்று வியாழக்கிழமை நாடு முழுவதும் 13 மணி நேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

முன்னதாக 10 மணி நேரமே மின்வெட்டு நடைமுறையிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் மின் தடை நேரத்தை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அனல் மின் நிலையங்களை 15

## முகக்கவசத்தை அகற்ற 80வீததடுப்பூசிஅவசியம்!

### சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 31

கொரோனாவை தடுக்கும் மூன்று தடுப்பூசிகளையும் பெற்றவர்களின் எண்ணிக்கை, 80 வீதத்தைக் கடந்தால் மட்டுமே முகக் கவசத்தை அகற்றுவது குறித்து தீர்மானிக்க முடியும் என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும், அவ்வாறான நிலை ஏற்படும் வரை, முகக் கவசத்தை அகற்றுவது குறித்து எந்தத் தீர்மானமும் எடுக்கப்படாது என்று சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் 3 15

## வாசகர்களுக்கு...!

நாட்டின் நெருக்கடியான பொருளாதர சூழலால் கடதாசி மற்றும் பத்திரிகை உற்பத்தி செலவுகள் வெகுவாக அதிகரித்துள்ளன. இவ்வளவு நாளும் அந்தச் சுமையை பத்திரிகையே முழுமையாக சுமந்தது. எனினும், தற்போது பத்திரிகையின் உற்பத்திச் செலவு மிகவும் உயர்வடைந்துள்ளது. ஏற்படும் இழப்பையும் ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தவிர்க்கமுடி 15

### அதிகரிக்கும் நெருக்கடி நிலை

## நாட்டை முற்றாக முடக்குமாறு அரசுக்கு யோசனை முன்வைப்பு!

கொழும்பு, மார்ச் 31

கடும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதால் நாட்டை ஓரிரு நாட்களுக்கேனும் முழுமையாக மூடுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டால் 15 மணி நேரம்வரை மின்வெட்டு அமுலாகும் அபாயம் உள்ளது. டீசல் இன்மையால் போக்குவரத்தும் ஸ்தம்பிக்கக்கூடும். அத்துடன், தொழில் துறைகளும் நெருக்கடியில் சிக்கியுள்ளன.

எனவே, இந்நிலைமையை சீர்செய்வதற்கு சில நாட்களேனும் நாட்டை முழுமையாக மூடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பில் அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வெளியாகவில்லை. (அ)

## இது அரசியல் செய்யும் நேரமல்ல நாட்டுக்காக உழைக்கும் தருணம்!

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 31

இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. அனைவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

5,000 குளக்கட்டுகளை புனரமைக்கும் இரண்டாம் கட்டப் பணிகளில் கலந்துக்கொண்டு நேற்று அலரிமாளிகையில் வைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

பூமியில் 15

## தமிழக மீனவருடன் பேச்சு; இனி பங்கேற்க மாட்டோம்!

### வட மாகாண கடற்றொழிலாளர் இணையம்

மன்னார், மார்ச் 31

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. வட பகுதி மீனவர்கள் என்ற வகையில் இந்திய - தமிழக மீனவர்களுடன் எந்த ஒரு பேச்சிலும் கலந்து கொள்ளப் போவதில்லை என்று வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் என். எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் அவர் நேற்று நடத் 15

## பொருளாதார மீளெழுச்சிக்கு சர்வதேச ஒத்துழைப்பு தேவை!

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 31

தற்போது நிலவுகின்ற உலகளாவிய நெருக்கடியால் வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களை வளப்படுத்துவதற்கும் சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சவால்கள் இருந்த போதிலும், பிம்ஸ்ரெக் நாடுகளின் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

ஈழநாடு



## இப்படியும் நடக்கிறது...!

தேசிய அரசு ஒன்று அமைக்கப்படலாம் என்றும் அதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கலாம் என்றும் சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அதற்கான முயற்சிகள் கொழும்பில் நடந்தாலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை என்பதையும் அந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது அரச தரப்பில், முக்கியமாக - ஜனாதிபதி மாத்திரமன்றி, பிரதமரும்கூட ஒரேநாளில் தனித்தனியாக அறிக்கைகளை வெளியிட்டு, அதனை நிராகரித்திருக்கின்றனர்.

இப்படியொரு செய்தி நேற்று மாத்திரம் பேசப்படவில்லை. சர்வகட்சி மாநாடு முடிந்தகையுடன் அதுபற்றிய பேச்சுக்களும் விமர்சனங்களும் பரவலாக பகிரப்பட்டன.

ஆனால், பல நாட்களின் பின்னரேயே, அரச தரப்பில் இது திட்டவட்டமாக இப்போது மறுக்கப்பட்டிருப்பதை கவனிக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதார நிலைமையில் சர்வகட்சி மாநாடு நடந்தபோது இருந்ததற்கும் இன்று இருப்பதற்குமிடையே சில வேறுபாடுகளைக் காணலாம். அதற்காக, பொருளாதர நெருக்கடி தீர்ந்துவிட்டது என்பதல்ல. இந்தியாவிடமிருந்து கிடைத்த ஒரு பில்லியன் டொலர் கடனும், சீனாவிடமிருந்து கிடைத்த ஒரு பில்லியனுக்கும் அதிகமான டொலர் கடனும் நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாட்டை நிவர்த்திக்க ஓரளவு துணையாகியிருக்கின்றன.

சித்திரைப்புத்தாண்டு காலத்தில் இந்தப் பொருட்களுக்காக மக்கள் கியூவில் நிற்கவேண்டிய தேவை இருக்காது என்றே நிதி அமைச்சரும் உறுதியளித்திருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை செலுத்தவதற்கான கால நீடிப்பை பெற்று, மேலும் சில உதவிகளையும் பெற்றால் தடுமாறி வந்த அரச நிர்வாகத்தை தூக்கி நிமிர்த்திவிடலாம் என்ற சிறிய நம்பிக்கை இப்போது அரச தரப்பினருக்கு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

டொலர் வருமானத்தை எப்படி அதிகரிக்கலாம் என்று கணக்குப்போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கின்றது ஒரு பொருளாதார வல்லுனர்கள் குழு.

நிலைமை இப்படிப் போய்க்கொண்டிருக்க, இந்த இடைக்கால அரசு யோசனையை இப்போது கைவிட்டதன் பின்னணியில் மற்றுமொரு சமாச்சாரம் இருப்பதாக கொழும்பில் முக்கிய அரசில் விமர்சகர் ஒருவர் அப்புக்குட்டியிடம் விபரித்தார்.

அரசின் பங்காளிக் கட்சிகள் பதினொன்றிடமும், பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களோடு இணையாமல், அரசுடன் முரண்பட்டுக் கொண்டும் சிலர் இருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, அரசின் பெரும்பான்மையை இழக்கச் செய்வதில் விமல் வீரவன்ச- கம்மன்பில - வாசு அணி தீவிரமாக முயன்றுகொண்டிருக்கின்றது.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்த நிமல் லான்சா, பதவி பறிக்கப்பட்ட சுஜித் பிரேமஜயந்த, மற்றும் நீண்டகாலமாகவே அதிருப்தியில் இருக்கும் அனுர பிரியதர்சன யாப்பா போன்றவர்களுடன் இன்னும் சிலரை அணிதிரட்டும் வேலையை கச்சிதமாக செய்துகொண்டிருக்கிறது விமல் அணி.

இந்த நேரத்தில் இடைக்கால அரசு என்று புறப்பட்டால், தற்போதுபதவியில் இருக்கும் பலரும் பதவியை இழக்கவேண்டிவரலாம். அதனாலும் அதிருப்தி அதிகரிக்கவே செய்யும்.

இவ்வாறு அதிருப்தியடைபவர்கள், விமல் அணியுடன் சேர்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இது அரசுக்கே நெருக்கடியைக் கொடுக்கலாம் என்பதாலேயே அந்த இடைக்கால அரசு யோசனை இப்போது கைவிடப்பட்டிருப்பதாக அந்த கொழும்பு விமர்சகர் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு நடந்த அன்றைய தினமே, அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கண்டிக்கு அணிவகுத்துச் சென்று, மகாநாயக்கர்களைச் சந்தித்திருந்தனர்.

அந்தச் சந்திப்பின் பின்னர், விமல் வீரவன்ச ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது, அரசின் பெரும்பான்மையை இல்லாமல் செய்வதே தமது தற்போதைய குறிக்கோள் என்பதை தெரிவித்திருந்ததும் கவனிக்கத்தக்கது.

**- ஊர்க்குருவி**

# இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பில் எந்த முயற்சியுமே வெற்றியளிக்கவில்லை

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

*மன்னார், மார்ச் 31*

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற் கொள்ளப்பட்ட அனைத்துச் செயல்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதோடு, எமது முயற்சிகள் வெற்றியளிக்காமல் இருக்கின்றது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயல்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதோடு, வெற்றி அளிக்கப்படாமல் இருக்கின்றது.

நாங்கள் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்திய போதும் இன்னும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறைவடையவில்லை.

புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் ஊடாக இதற்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்று நம்பி இருந்த போதும் உரிய கடற்றொழில் அமைச்சரினால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இரண்டு வருடங்கள் கடந்தும் அதற்கான எந்த ஒரு தீர்வும் கிடைக்கவில்லை.

அண்மையில் கச்சதீவில் இந்திய மீனவர்களுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தி இருக்கிறார்கள். அந்தக் கலந்துரையாடலில் உரிய விடயங்கள் எதுவும் பேசப்படவில்லை.

ஆனால் இந்திய தரப்பால் இலங்கை மீனவர்களுடன் பேசுவோம். பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வோம் என்று அவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

வடபகுதி மீனவர்கள் என்ற வகையில் இந்திய தமிழக மீனவர்களுடன் எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் கலந்து கொள்ளப் போவதில்லை என்ற செய்தியை நாங்கள் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக நீண்ட வரிசையில் நின்று எரிபொருள்களை மீனவர்களும் பொது



மக்களும் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்.

இந்த நெருக்கடி நிலை ஏன் ஏற்பட்டது என்று எங்களுக்கு விளங்கவில்லை. குறிப்பாக வடபகுதிக்கு வருகின்ற எரிபொருட்களை சமமாக பங்கிட்டு ஒரு படகுக்கு இவ்வளவுதான் என்று முறையாக செயல்படும் போது இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

இது தொடர்பாக நாங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மாவட்ட செயலாளரிடம் தெரிவித்திருந்தோம்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் 33 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் 3500 கண்ணாடி இழைப் படகுகள் உள்ளன. ஒரு படகுக்கு கிட்டத்தட்ட 30 லீற்றர் எரிபொருள் தேவை என்று பார்த்தாலும் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லீற்றர் எரிபொருள் தேவைப்படுகிறது.

எனவே வரும் எரிபொருட்களை சமமாகப் பங்கிட்டு வழங்கியிருந்தால் மீனவர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் நிற்கவேண்டிய தேவை இருக்காது.

மீனவர்களுக்கான எரிபொருட்களை மீன்பிடிச் சங்கங்களுக்கு வழங்கி அந்த சங்கங்களின் ஊடாக அங்கத்தவர்களுக்கு வழங்குவது இலகுவாக இருக்கும்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலங்களில் நாங்கள் இதையே மேற்கொண்டோம்.

பொதுமக்கள் தங்களுக்கு தேவையான எரிபொருளை எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக பூர்த்தி செய்து கொள்வார்கள். குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மாவட்ட கடற்தொழில் உதவி ஆணையாளர் போன்றவர்களுக்கு தெளிவுபடுத்தி இருக்கின்றோம்.

எனவே மாவட்டத்தில் இயங்கும் எரிபொருள் வழங்கும் நிலையங்கள் மீனவர்களுக்கான எரிபொருட்களை மீனவ சங்கங்களுக்கு பகிர்ந்தளித்து மீனவர்களின் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் செயல்படுத்தவேண்டும்-என்றார். (அ)

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் புதிய தலைவராக செந்தில் தெரிவு!

*கொழும்பு, மார்ச் 31*

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராக செந்தில் தொண்டமான் தேசிய சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், தவிசாளராக நிதிச் செயலாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவாகியுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டம் கொட்டக்கலை சி.எல்.எவ் வளாகத்தில் இடம் பெறுகின்றது.

இந்தக் கூட்டத்திலேயே தேசிய சபை கூடி, புதிய தலைவராக செந்தில் தொண்டமானை தெரிவு செய்துள்ளது. (அ)

# இதயம், சிறுநீரகம், புற்று நோயாளர்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் தட்டுப்பாடு?

*கொழும்பு, மார்ச் 31*

நாடளாவிய ரீதியிலுள்ள பல வைத்தியசாலைகளில் இதயம், சிறுநீரகம் மற்றும் புற்று நோயாளர்களுக்காகப் பயன்படுத்தப்படும் அதிக ளவான மருந்துகளுக்கு தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருந்தாளர் சங்கம் தெரிவித் துள்ளது.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அதிகளவான ஏனைய மருந்துகள் தீர்ந்துவிடும் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையில் எரிபொருள் பாவனை இவ்வருடம் 33-35 சதவீதம் அதிகரிப்பு!

*கொழும்பு, மார்ச் 31*

இலங்கையில் எரிபொருள் பாவனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 30 - 35 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

2021 ஜனவரிக்குள் 139,000 மெற்றிக்தொன் எரிபொருள் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், 2022 ஜனவரியில் எரிபொருளின் பயன்பாடு 198,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

வழக்கத்துக்கு மாறான பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த சுமித் விஜேசிங்க, அவ்வாறு அதிகரிப்பதற்கான காரணத்தை ஆராய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையையும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)

ஈழநாடு
Eelanadu
31.03.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## பிரதமர் பதவி?

பிரதமர் பதவி தொடர்பில் அடிக்கடி சர்ச்சைகள் ஏற்படுகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில்தான் பிரதமர் பதவி என்பது முக்கியமானதொரு பதவியாக இருந்தது. இறுதியில், ரணில் - மைத்திரி ஆட்சியின் வீழ்ச்சிக்கும் அது வழிவகுத்தது. மைத்திரிபால சிறிசேன காதோடு - காது வைத்தால்போல், ரணில் விக்கிரமசிங்கவை பதவிலிருந்து நீக்கி, மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் அமர்த்தினார். மிகவும் அனுபவம் வாய்ந்த மஹிந்த ராஜபக்ஷ - ஏன் அந்த வேளையில் ரணில் விக்கிர மசிங்கவின் கதிரையில் ஆர்வம் காண்பித்தார் என்பதும் புரியாத புதிராகவே இருக்கின்றது. இறுதியில், ரணில் விக்கிரமசிங்க தனது, பிரதமர் பதவியை காப்பாற்றுவதற்காக உச்சநீதிமன்றம் செல்லும் நிலைமையேற்பட்டது. மைத்திரியின் நடவடிக்கை, அரசியல் யாப்பு சதிப்புரட்சியென்றும் வர்ணிக்கப்பட்டது.

ரணிலின் கதிரையை குறிவைத்த மஹிந்த ராஜபக்ஷ இப்போது நாட்டின் பிரதமராக இருக்கின்றார். இந்த நிலையில், அவ்வப்போது ரணிலை பிரதமராக்கி, நாட்டை மீட்டெடுப்பது தொடர்பான செய்திகள் உலா வருகின்றன. ரணில் இது தொடர்பில் அமைதியாக இருக்கின்றார் ஆனால், மஹிந்த ராஜபக்ஷ இந்த செய்திகளை மறுத்துவருகின்றார். ஆனால், இந்த செய்திகள் மறைமுகமாக ஒரு செய்தியை பரப்ப முற்படுகின்றன. அதாவது, மஹிந்தவால் முடியாது. ரணிலால்தான் முடியும் - அவரிடம் ஆட்சியை ஒப்படையுங்கள் - என்றவாறான செய்தி கள் அடிக்கடி மக்கள் கண்ணில் படக் கூடியவாறு பரவிவருகின் றன.

ரணில் கடந்த தேர்தலில் வரலாறு காணாத தோல்வியை சந்தித்திருந்தார். அதன் பின்னர் மிகவும் அமைதியாக இருந்த ரணில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசிய பட்டியல் ஆசனத்தின் மூலம், பாராளுமன்றத்திற்குள் நுழைந்தார். மிகவும் கையறுநிலையில் இருந்தாலும் கூட, ஓர் ஆட்டத்தை ஆடிப்பார்க்கும் ஆசை அவருக்குள் நிச்சயம் இருக்கும். இப்போது அதற்கான வாய்ப் புக்கள் சற்றுப் பிரகாசமாகவே இருக்கின்றன. இந்த நிலையில்தான் அவ்வப்போது ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கம் மற்றும் ரணிலை பிரதமராக்குதல் தொடர்பான செய்திகள் வெளிப்படுகின் றன.

மஹிந்த ராஜபக்ஷ ஒரு தொழில்முறை அரசியல்வாதி. அவருக்கு சில இலக்குகள் இருக்கின்றன. ஆனால், அந்த இலக்குகள் முன்னர் எதிர்பார்த்ததுபோல், இனி இலகுவாக இருக்கப் போவதில்லை. ஆனால், அவருக்கு இருப்பது போன்ற இலக்குகள் அவரின் சகோ தரர்களுக்கு இருக்கின்றதா என்பதிலும் கேள்விகள் உண்டு. ஏனெ னில், ராஜபக்ஷக்களின் செல்வாக்குக்கு உட்பட்ட கட்சி சரிவை சந்தித்து வருகின்றது.

நாட்டின் இன்றைய நெருக்கடிகள் அனைத்துக்கும் ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவரான, பஸில் ராஜபக்ஷவே காரணம் என்ற வாறான பிரசாரங்களை, மஹிந்தவின் சகாக்களாக இருந்தவர்களே முன்னெடுத்து வருகின்றனர். அதே வேளை குடும்ப ஆட்சி முடிவுக்கு வருமென்றவாறான பிரசாரங்களையும் மஹிந்தவின் சகாக்களே முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறானதொரு சூழலில்தான், பிரதமர் பதவிக்கு ரணில் பொருத்தமானவர் என்னும் கதையும் அடிக்கடி முகம் காட்டுகின்றது. ரணில் போன்ற ஒருவரை சிங்கள மக்கள் இழந்து போனதுதான் அனைத்து பிரச்னைகளுக்கும் காரணம் என்றவாறான செய்திதான், இதற்குள் ஒளிந்திருக்கின்றது.

# 13ஆவது திருத்த சட்டத்துக்காக டக்ளஸ் கொடுத்த விலை அதிகம்!

அலசுவது இராஜதந்திரி

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், மீன்பிடித்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஓரிரு தினங்களுக்கு முன்னர் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்துக்கு இன்று நேற்றல்ல. அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட நாள் முதல் தாம் குரல் கொடுத்து வருவதாகக் கூறியிருந்தார்.

ஈ. பி. டி. பி. செயலதிபர் கூறியதற்கு எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமிருக்க முடியாதென்றே கருத முடியும். 13ஆவது திருத்தச்சட்டம் அமுலுக்கு வந்த காலம் முதல் அதன் அமுலாக்கத்துக்கு தமிழர் விடுதலைக் கூட் டணி செயலதிபராக இருந்த அ. அமிர்தலிங்கம் மிகத்துணிச்சலோடு குரல் கொடுத்ததன் காரணமாக அவர் தமிழீழ விடுதலைப் புலிகளால் வேட்டையாடப்பட்டிருந்தார். இது தவிர, இந்திய பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி உயிரிழப்பதற்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசியல் அமைப்பில் கொண்டு வரும் விதத்தில் அன்றைய இலங்கை அதிபர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் அவர் செய்து கொண்ட இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தமே முக்கிய காரணமாக இருந்தது.



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பாக 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்க துணிச்சலோடு முன்வந்து வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சராக அண்ணாமலை வரதராஜப் பெருமாள் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்பாக பதவியேற்றுக்கொண்டார்.

அச்சமயம் இந்திய அமைதிப் படையினர் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அமுலாக்கத்துக்காக 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு வேட்டுவைத்த தமிழீழ விடுதலைப் புலிகளோடு யுத்தத்தில் குதித்து வரதராஜப்பெருமாள் தலைமையிலான வடக்கு - கிழக்கு மாகாண சபை தலைமைத்துவத்துக்கும் துணை நின்றனர்.

இருந்தபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாண சபை வலிதற்றதாகி முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாளும் இந்திய அமைதிப் படையினரோடு இந்தியா திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இதன்பின்னர், வடக்கு - கிழக்கு அரசியலில் தோன்றிய புதிய அத்தியாயத்திலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்களிப்பு ஆரம்பமாகியிருந்தது. அவர் இலங்கையின் தேசிய அரசியலில் பிரவேசித்த காலம்முதல் ஒரு தடவையல்ல. பல தடவைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலை முயற்சிகளிலிருந்தும் உயிர் தப்பி தமது அரசியல் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முப்பது வருடங்களுக்கு முன்னர் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டை எவ்வித தளம்பலான போக்குக்கும் இடம்தராத வகையில் எடுத்திருந்தார். டக்ளஸின் அரசியல் சமயோசிதம் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக நிலை கொண்டிருந்தபோது நன்கு பிரதிபலித்திருந்தது. நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கு பற்றிய போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயக கட்சி தவிர? வடக்கு - கிழக்கின் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுமே தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து அவர்களின் சமரச முயற்சிகளை வரவேற்றிருந்தன. ஆனால், அக்கட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் முழுமையாக இறங்குவார்களேயானால் அது குறித்து தம்மால் மகிழ்ச்சியடைய முடியும் என்று கூறிய அதேசமயம் தமிழீழ விடுதலைப் விடு தலைப் புலிகள் முழுமனதோடு சமரச நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்பது சந்தேகத்துக்குரியதே எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டது போலவே ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அரசியல் பேச்சுகளில் முதல் தடவையாக இறங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் பின்னர் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியிலும் பேச்சுக்களில் குதித்து தமது வாய்ப்புகளை தவறவிட்டனர். பின்னர், இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீழ்ச்சி கண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனித்து தற்சமயம் பதின்மூன்று வருடங்கள் உருண்டோடியுள்ளன. இத்தருணத்தில் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுமே வடக்கு - கிழக்கில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கத்தின் மூலமே இனப்பிச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வை காணமுடியும் என்று தெரிவித்து இந்தியாவின் தயவையும் நாடி வருகின்றனர்.

இந்தத் தருணத்திலேயே 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கத்தை மரணப் பொறிகளுடன் கூடிய சவால்களுக்கு மத்தியில் எவ்வித தளம்பல் போக்குக்கும் இடமளிக்காது தாம் எப்போதுமே வலியுறுத்தி வந்ததாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுவதற்கு எவ்விதத்திலும் மாற்றுக்கருத்து இருக்க முடியாதென்றே உறுதிபடக் குறிப்பிடமுடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பங்குனி - 31 வியாழக்கிழமை**
**பிலவ வருடம் - பங்குனி 17**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 10.30 - 12.00 |
| ராகு காலம் | : | 1.30 - 3.00 |
| திதி | : | அமாவாசை |




**மேடம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கலகலப்பு கூடும். புது முடிவுகள் எடுப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அருமை மற்றவர்களுக்குப் புரியும்படியாக நடப்பீர்கள்.

**இடபம்**
செயலில் வேகம் கூடும். சமூகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். கோபம் குறையும். நல்லவர்களின் கருணை கிடைக்கும்.

**மிதுனம்**
உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக பேசுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். அழகும், இளமையும் கூடும். சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைப்பீர்கள்.

**கடகம்**
நீங்கள் எதிரியாக நினைத்த ஒருவர் உங்கள் நட்பை நாடிவருவார். அமைதியாக இருந்து திட்டமிட்ட விஷயங்களை முடிப்பீர்கள். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். சுபநிகழ்வு நடக்கும். குடும்பத்தில் எதிர்பாராத சந்தோஷம் உண்டு. பயம் நீங்கும். அக்கம்பக்கத்தினர் கலகலப்பாக பேசி உதவி செய்வர்.

**கன்னி**
வருமானத்தை அதிகரிக்கும் வழிகளை யோசிப்பீர்கள். உங்களை நம்பி கொடுத்த செயலை சிறப்பாக செய்வீர்கள். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்**
என்றைக்கோ செய்த முயற்சிக்கு இன்று நல்ல பலன் கிடைக்கும். கடமைகளில் மன உறுதியுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். நண்பர்கள் குடும்பத்தினர் இடையே நெருக்கம் உண்டாகும்.

**விருட்சிகம்**
செலவு குறைவதால் பணப்புழக்கம் கணிசமாக உயரும். இன்றைய நிகழ்வுகளும் சூழ்நிலையும் மனதை லேசாக்கும். எதிர்பாராத நபரின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு**
உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உற்சாகமான நாள். சகபணியாளர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு தருவார்கள். பணியாளர்களுக்கு பொறுப்பு கூடும். நல்ல மாற்றம் உண்டாகும்.

**மகரம்**
நடைமுறையை கற்றுக் கொள்வீர்கள். பொறுமை தேவை. உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். செல்வாக்கு உயரும். அதிகார பதவியில் இருப்பவர்களுடன் வீண் பகை வேண்டாம்.

**கும்பம்**
புதிய நண்பர்கள் அறிமுகமாவர். அவர்களிடம் கவனமாக பேசுங்கள். பொதுநலச் செயல்களில் ஈடுபடுவீர்கள். பாராட்டு கிடைக்க தாமதமாகும். நீங்கள் தேடிய பொருள் கிடைக்கும்.

**மீனம்**
நண்பர்கள் இடையே ஆரோக்கியமான விவாதங்கள் உண்டு. பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். பாக்கிகள் வசூலாகும். உடல்நிலை மேம்படும். மேலதிகாரி உங்களை ஆதரிப்பார். யோகமான நாள்.

# பேரறிவாளன் விவகாரம் மட்டும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதா?

## தமிழக அரசிடம் உயர் நீதிமன்றம் கேள்வி

சென்னை, மார்ச் 31

7 பேர் விடுதலை தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தில், பேரறிவாளன் விவகாரம் மட்டும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதா? அல்லது 7 பேரின் வழக்கும் அனுப்பப்பட்டுள்ளதா? என விளக்கமளிக்க தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக இருந்து வரும் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய ஏழு பேரை விடுதலை செய்வது தொடர்பாக முந்தைய அ.தி.மு.க அரசு அமைச்சரவை யில் தீர் மானம் நிறைவேற்றியது. அந்த தீர்மானத்தை ஆளுநருக்கு அனுப்பி வைத்திருந்தது. நீண்ட காலமாக அந்த தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுக்காமல் இருந்ததால், ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்காமல் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் எனவும், அமைச்சரவை தீர்மானத்தின் மீது முடிவெடுக்காமல் இருக் கும் ஆளுநரின் செயல்பாடு அரசியல் சாசனத்துக்கு விரோ தமானது என அறிவிக்கக் கோரியும் நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக் கல் செய்திருந்தார்.

இந்த மனு, விசாரணைக்கு வந்தது. அப்போது, நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், “ஏற்கெனவே இதே விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட 3 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அமைச்சரவை தீர்மானத்தை 42 மாதங்களாக நிலுவையில் வைத்திருப்பது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என அறிவிக்க வேண்டும். மேலும், இதேபோல அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில், ஏற்கனவே 20 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் நளினியை தொடர்ந்து சிறையில் அடைத்திருப்பது சட்டவிரோத காவல்” என்று வாதிட்டார்.

பின்னர், முன் கூட்டியே விடுதலை செய்ய நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், பேரறிவாளன் விவகாரம் மட்டும் குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்டதா அல்லது 7 பேரின் வழக்கும் அனுப்பப்பட்டுள்ளதா என விளக்கம் அளிக்க தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாரை 8 மணி நேரத்தில் நீந்தி கடந்த மாணவன்!

சென்னை, மார்ச் 31

தனுஷ்கோடி - இலங்கை தலைமன்னார் இடையேயான பாக் ஜலசந்தி கடல் பகுதியை குறைந்தநேரத்தில் (7 மணி நேரம் 55 நிமிடம்) நீந்தி தேனியைச் சேர்ந்த மாணவர் சிநேகன் சாதனை படைத்தார். மேலும், தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு திரும்பி நீந்தி வந்ததிலும் அவர் நடப்புச் சாதனையை முறியடித்தார்.

ஓரிடத்திலிருந்து புறப்பட்டு மறுபுறத்தை அடைந்த பின்பு தொடர்ச்சியாக மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு தொடங்கிய இடத்துக்கே வந்து சாதனை புரிந்தவர்கள் 2 பேர் மட்டுமே. அதில் ஒருவர், வல்வெட்டித் துறையைச் சேர்ந்த வி.எஸ். குமார் ஆனந்தன். இவர் 1971இல் மொத்தம் 60 கி.மீ. தொலைவை 51 மணி நேரத்தில் நீந்தி கடந்தார். 11.4.2021இல் இலங்கை கடற்படையைச்சேர்ந்த ரோஷான் அபேசுந்தர 28 மணி 19 நிமிடங்களில் நீந்தி கடந்தார்.

இந்நிலையில் தேனியை சேர்ந்த சிநேகன் (14) தனுஷ்கோடியிலிருந்து இலங்கை தலைமன்னார் சென்று, அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு வரையிலும் உள்ள பாக்ஜலசந்தி கடலில் இருபுறமும் நீந்தி கடக்க இந்திய வெளியுறவுத்துறை, இலங்கை தூதரகம் மற்றும்பாதுகாப்புத் துறை அமைச்சகத்திடம் அனுமதி கோரியிருந்தார்.

இந்தியா - இலங்கை இருநாட்டு அனுமதி கிடைத்த நிலையில், நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிஅளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனையிலிருந்து நீந்த தொடங்கி 7 மணி 55 நிமிடங்களில் இரவு 9.55 மணியளவில் தலைமன்னாரை அடைந்தார். இதன் மூலம் 2018இல் ஆந்திர மாநிலம் விஜயவாடாவை சேர்ந்த துளசி சைதன்யா (29), 8 மணி 25 நிமிடத்தில் நீந்தி கடந்த சாதனையை சிநேகன் முறியடித்தார்.

தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் தலைமன்னாரில் இருந்து நீந்த தொடங்கி, நேற்று காலை 9.45 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனையை அடைந்தார். இதன் மூலம், 11.4.2021 இல் இலங்கை கடற்படையைச் சேர்ந்த ரோஷான் அபேசுந்தர 28 மணி 19 நிமிடங்களில் நிகழ்த்திய சாதனையை, 19 மணி 45 நிமிட நேரத்தில் நீந்தி முறியடித்து புதிய சாதனையை பதிவு செய்தார்.

# முடிந்தால் என்னை கைது செய்யுங்கள்

## அண்ணாமலை சவால்

சென்னை, மார்ச் 31

பாஜக அலுவலகத்தில் தான் இருப்பேன், முடிந்தால் என்னை கைது செய்யுங்கள் என, பாஜக., தலைவர் அண்ணாமலை சவால் விடுத்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை கூறியதாவது, தனி விமானத்தில் உதயநிதி ஸ்டாலின், சபரீசன், உதவியாளர்கள் வின்செண்ட் விஜய் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் டுபாய் சென்றுள்ளனர். தொடர்ச்சியாக முதல்வர் குடும்பத்தினர் ஏன் டுபாய் செல்கிறார்கள்? டுபாய் முதலீடுகள் தமிழகத்திற்கு வரும் நிதியா அல்லது கோபாலபுரத்திற்கு வரப்போகும் நிதியா?

நான் பேசிய அனைத்து விஷயங்களை ஆதார பூர்வமாக சந்தித்து இருக்கிறேன்.

நான் அதிமுக., உறுப்பினர்கள் தூண்டு கோளால் பேசுவது போன்ற அவதூறை பரப்புகிறார்கள். நான் பாஜக அலுவலகத்தில் தான் இருப்பேன். முடிந்தால் என்னை கைது செய்யுங்கள்.

உங்களுக்கு திராணி இருந்தால் என்னை கைது செய்யுங்கள். 6,100 கோடி ரூபாய் முதலீட்டில் 70 சத வீதத்தை கேரளாவை சேர்ந்த யூசுப் அலி மட்டும் முதலீடு செய்துள்ளார் என கூறினார்.

# சசிகலா மீண்டும் சேர்க்கப்படுவாரா?

## எடப்பாடி பழனிசாமி பதில்

அ.தி.மு.க.வின் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும், தலைமைக் கழகமும் இணைந்து அவரை கட்சியில் இருந்து நீக்குவது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதை நானும் ஓ.பி.எஸ்.சும் இணைந்து அறிவித்து விட்டோம். அதெல்லாம் முடிந்து விட்டது. மீண்டும் அதற்கு வாய்ப்பில்லை. யாராலும் அதை எதிர்த்து புத்துயிர் கொடுக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார். செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

“அரசியல் வேறு. தனிப்பட்ட முறை என்பது வேறு. சசிகலாவுடன் தனிப்பட்ட பிரச்னை கிடையாது. அதனடிப்படையில் ஓபிஎஸ் பேசியுள்ளார். இப்போது ஸ்டாலினுடன் எங்களுக்கு அரசியல் ரீதியாகவே பிரச்சினை உள்ளது. தனிப்பட்ட முறையில் எந்த பிரச்சினையும் இல்லை. அ.தி.மு.க.வில் எந்த குழப்பமும் இல்லை. எப்போதும் ஒரே கருத்துத்தான்.“

## இயேசு கடவுளின் மகன்



இன்று ஒரு செயல் / செய்தி நடைபெற்றால் அதை மக்கள் நம்புவதற்கு சான்றுகள் தேவையாகவுள்ளது. ஏனெனில் மக்கள் எது உண்மையானது என்றும் எது போலியானது என்றும் ஆராய்ந்து பார்க்கும் திறமைகள் அவர்களுக்குண்டு. இன்றைய நற்செய்தியிலும் இயேசு தாம் கடவுளுடைய மகன், கடவுளிடமிருந்து வந்தவர் என்பதற்கு பற்பல சாட்சியங்களை பரிசேயருக்கு முன்னெடுத்து வைக்கின்றார்.

இயேசு தாம் கடவுளின் மகனென்பதைத் கடவுளுக்குரிய இரக்கச் செயல்களை தாமும் செய்ததன் மூலம் யேசு தாம் தந்தையிடமிருந்து வந்தவர் என்பதை எடுத்துக்காட்டுகின்றார். “நானும் தந்தையும் ஒன்று” என்றவர் “நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இணைந்திருக்கின்றோம்” என்றும் இயேசு கூறுகின்றார். இதன் மூலம் இயேசு தந்தையின் மூலம் செயலாற்றுகின்றார் என்பது தெளிவாகின்றது.

நாமும் இயேசுவில் இணைந்திருப்பவர்கள் என்பதை எமது வாழ்வில் காட்ட அன்பு செயல்களன்றி வேறு சான்றுகள் இல்லை. “ நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டுமென்பதே என் கட்டளை” (யோவா 15:17) என்று கூறுகின்றார்.

எனவே இயேசுவின் இச் சான்றுகள் அவரின் பால் நம்மில் விசுவாசத்தை வளர்க்கவும், பிறரில் அன்பு கொள்ளவும் இத் தவக்காலம் நமக்கு தரப்பட்டுள்ளது.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# புலம்பெயர் தமிழர் மீதான தடை நீக்கப்படவேண்டும்!

## வலியுறுத்துகின்றார் ரணில்

கொழும்பு, மார்ச் 31

**இலங்கையில் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படுமானால் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து மட்டுமல்ல ஐரோப்பிய அரசுகள்கூட இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அத்துடன், தமிழ் மக்களின் நியாயமான பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடைநீக்கப்படவேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை நியாயமானது எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியவை வருமாறு:

சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு எமது ஆட்சியிலும் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆட்சி வந்த பிறகு பல அமைப்புகள் தடை செய்யப்பட்டன. எம்முடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்ட அமைப்புகளும் தடைபட்டியலில் இணைக்கப்பட்டன. அவை மீதான தடையை நீக்குமாறுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. அந்த கோரிக்கை நியாயமானது.

எமது ஆட்சியில் வேலை வாய்ப்பு இருந்தது, வருமானம் இருந்தது, உண்பதற்கு உணவு இருந்தது, ஆனால் தேசிய வாதம் பற்றி கதைத்தனர், நாட்டை மீட்போம் என சூளு ரைத்தனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி கதைத்தனர். இறுதியில் தற்போது என்ன நடந்துள்ளது? இனவாதத்தை உண்ண முடியுமா? இனவாதத் தால் ஒரு லீற்றர் டீசல் வழங்க முடியுமா?

எனவே, இவ்வாறான அரசியலை விட்டுவிடுவோம். தமிழ் மக்களின் நியாயமான பிரச்னைக்கு தீர்வை வழங்குவோம். தேரர்களும் இதனை வலியுறுத்துகின்றனர்.



புலிகளின் கதை முடிந்துவிட்டது. அவர்களால் மீண்டெழமுடியாது. புலம்பெயர் அமைப்புகளிடம் தற்போது நிதி இல்லை, தனி நபர்களிடம் தான் பண பலம் உள்ளது. புலம்பெயர் அமைப்புகளின் முதலீடு வந்தால் நல்லதுதான். குறிப்பாக இனப்பிரச்னை தீர்க்கப்படும் என்ற நிலைப்பாட்டை நாம் எடுத்தால் புலம்பெயர் தமிழர்களைவிடவும் அதிக வெளிநாட்டு முதலீடுகள் வரும். ஐரோப்பிய அரசுகள்கூட முதலீடுகளை மேற்கொள்ளும்.

அதேவேளை, எமது ஆட்சியில் புதிய அரசமைப்புக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 7 மாகாண முதல்வர்கள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர்கள், மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வேண்டும் என யோசனை முன்வைத்தனர். இவர்கள் அனைவரும் சிங்களவர்கள், தீவிரவாதிகள் கிடையாது.

அதேபோல முதல்வர்கள் ஐக்கிய தேசியக்கட்சியை சார்ந்தவர்களும் அல்லர். இந்த யோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏற்றது. இது பற்றி கலந்துரையாடலாம் எனவும் கூறியது. சுசில் பிரேமஜயந்த தலைமையில் இது தொடர்பில் ஆவணம் தயாரிக்கப்பட்டது. அந்த ஆவணம் குறித்து கலந்துரையாடி தீர்வை முன்வைக்கலாம்-என்றார். (அ)

# நெருக்கடியான சூழ்நிலையில் பதவி விலகுவது அர்த்தமற்றது

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 31

“நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவோ பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை. பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதே மிகவும் அவசியம்.”

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் சமல் ராஜபக்ஷ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

என்னால் இன்னும் கிராமத்துக்குச் செல்ல முடிகின்ற போதிலும் மக்கள் வரிசையில் நிற்பதைக் கண்டு நான் வருத்தமடைகின்றேன்.



தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசிலுள்ள எவரும் பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை. பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதே மிகவும் அவசியம்.

அரசிடம் நிதியைக் கடுமையாகக் கையளிப்பதை எண்ணெய் மற்றும் எரிவாயு வரிசையில் நிற்கும் மக்கள் நன்கு அறிந்திருந்த போதிலும் அதற்கு அரசு வழங்கும் பதில்கள் போதுமானதாக இல்லை.

எனவே, அரசிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும்-என்றார். (அ)

# மின்வெட்டு நெருக்கடி; வீட்டில் இருந்து வேலை!

## அரசுக்கு பரிந்துரை முன்வைப்பு

கொழும்பு, மார்ச் 31

மின்வெட்டு நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அரச நிறுவனங்களில் பணிபுரிவோர் வீட்டில் இருந்து வேலை செய்யும் முறைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில நாட்கள் மக்கள் வாழ்வது மிகவும் கடினமாக இருக்கும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றும் இன்றும் அரச நிறுவனங்களில் பணிபுரிவோர் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறைக்கு செல்லுமாறு அரசாங்கத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமை மேலும் மோசமாகி வருகிறது. இதற்கு தீர்வு காண எந்த நிறுவனமும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. நிதி நெருக்கடியால் இந்த மின் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நேற்றும் இன்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் இந்த சூழ்நிலையை நிர்வகிக்க நாங்கள் அரசாங்கத்துக்கு பரிந்துரைத்தோம்.

அடுத்த சில நாட்கள் பொதுமக்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு மின்சாரம் வழங்கவும் நாங்கள் எங்களால் முடிந்தவரை முயற்சி செய்கிறோம் என அவர் மேலும் கூறினார். (அ)

# தனியார் பஸ் உரிமையாளர்கள் அடுத்த வாரம் முதல் போராட்டம்

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் சேவை நியோக கட்டமைப்பில் காணப்படும் சிக்கல் நிலைமைக்கு அரசாங்கம் இவ்வார காலத்துக்குள் தீர்வு பெற்றுக்கொடுக்காவிடின் எதிர்வரும் வாரம் முதல் நாடு தழுவிய ரீதியில் பணிபுறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுப்படுவோம்.

எரிபொருள் பற்றாக்குறை என தொடர்ந்து எம்மால் புலம்பிக்கொண்டிருக்க முடியாது என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

மருதானை சனசமூக கேந்திர மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

எரிபொருள் கொள்வனவுக்காக தனியார் பஸ் உரிமையாளர்கள் சுழற்சி முறையில் எரிபொருள் வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் சேவை நியோக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்னைக்கு அரசாங்கம் இவ்வாரத்துக்குள் தீர்வு பெற்றுக்கொடுக்காவிடின் எதிர்வரும் வாரம் முதல் நாடு தழுவிய ரீதியில் பணிபுறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுப்படுவோம்.

எரிபொருள் தட்டுப்பாடு என எம்மால் தொடர்ந்து புலம்பிக்கொண்டிருக்க முடியாது.

ஐ.ஓ.சி நிறுவனம் எவ்வித கட்டுப்பாடுமின்றி எரிபொருள் விலையினை அதிகரித்த வண்ணம் உள்ளது, சிபெட்கோ எரிபொருள் நிலையத்திலும் எரிபொருள் பற்றாக்குறை காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், மறுபுறம் லீசிங் பிரச்னைக்கும் தீர்வு காண வேண்டியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு இவ்வார காலத்துக்குள் அரசாங்கம் தீர்வு பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் வாரம் முதல் நாடு தழுவிய ரீதியில் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுப்பட ஏனைய சங்கங்களுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ளோம்-என்றார். (அ)

# மே தின கூட்ட ஏற்பாட்டிலும் அரச பங்காளிகள் தனி வழி

கொழும்பு, மார்ச் 31

அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மே தின கூட்டத்தை தனியாக நடத்துவதற்கு அரச பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, விமலின் கட்சி, உதய கம்மன்பிலவின் கட்சி உட்பட 11 கட்சிகள் இணைந்து , அரசுக்கு எதிராக கொழும்பில் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி தலை மையகத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற விசேட கூட்டமொன்றின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# தேர்தல்களை உடன் நடத்தாமல் இழுத்தடிப்பு செய்கின்றது அரசு!

## இந்திய வெளியுறவு அமைச்சருக்கு சுட்டிக்காட்டினார் மு.கா. தலைவர்

கொழும்பு, மார்ச் 31

**13 ஆவது திருத்தத்தின் பின்னர், எதிர்காலம் குறித்த சந்தேகம் ஏற்படுகின்ற அளவுக்கு அரசு வெளிப்படைத் தன்மையுடன் உத்தரவாதங்களை வழங்கவில்லை. தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்யும் விவகாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரிடம் வலியுறுத்தினார்.**

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நிசாம் காரியப்பரும் கலந்து கொண்டார்.

அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சு தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

தமிழ்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகம் தமிழ், முஸ்லிம்களை உள்வாங்கும் விடயமாகும் உத்தியோகபூர்வ அறிக்கைகளில், தமிழ்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகத்தை கையாள்வதற்கான முஸ்லிம் தரப்பின் கருத்தை இந்திய தரப்பினர் அங்கீகரித்தனர்.



இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டபோது, முஸ்லிம்களின் அபிலாசைகள் குறித்த விவகாரங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழர் தரப்பின் பிரச்னைகள் குறித்து ஆழமான புரிந்துணர்வுடன் செயற்பட்டது.

அதேவேளை, முஸ்லிம் சமூகத்தின் விவகாரங்களில் அக்கறையுடன் மிகவும் நிதானமாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதையும் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார். இந்திய உதவியுடன் அமுல்படுத்தப்படும் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி திட்டங்களில் மூதூர், ஒலுவில் போன்ற துறைமுகங்களையும் உள்வாங்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கிடையிலான மத, கலாசார விவகாரங்களில் சகல இனங்களும் இந்திய துணைக் கண்டத்துடன், இலங்கையுடன் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்துள்ளன. இதனை மேம்படுத்துவதற்கு சகல மதங்களையும் முதன்மைப் படுத்திய தொடர்பாடல் முறையொன்றை இந்தியா முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை இதன்போது வெளியிடப்பட்டது. (அ)



# வாகனங்களின் சாரதிகள் புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 31

டீசல் உள்ளிட்ட எரிபொருட்களை வழங்குமாறு கோரி புத்தளம் - மதுரங்குளி பல நோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு வாகனச் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான எஸ்.எச்.எம்.நியாஸ் துசார பத்திரகே மற்றும் புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் நிமால் ஏக்கநாயக்க உள்ளிட்டவர்களுடன் வாகனச் சாரதிகளும், பொது மக்களும் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக கொள்கலன்களையும், சுலோகங்களையும் ஏந்தியவாறும், எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர், புத்தளம்-கொழும்பு பிரதான வீதியின் ஒரு பகுதியை மறைத்து தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)



# ஹற்றனில் பதற்றம்!

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவித்து ஹற்றனில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர்களும் பொதுமக்களும் இணைந்து ஹற்றனில் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியை மறித்து குறித்த போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றையும் வழிமறித்து, மீண்டும் ஹற்றன் நகருக்கே திருப்பி அனுப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரணிலிடம் ஆலோசனை பெறுவதற்கு நாம் தயார்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

"ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆலோசனை பெறவேண்டிய தேவை ஏற்படின், அதனை நாம் பெறுவோம். அதில் எவ்வித பிரச்னையும் கிடையாது." - என்று கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ரணில் விக்கிரமசிங்கதான் என்னை அரசியலுக்கு கொண்டுவந்தார். எனினும், அரசியலில் 'கேம்' விளையாடுவதற்கு நாம் தயார் இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு 72 வயதாகின்றது. அரசியலில் சிறந்த அனுபவம் உள்ளது.



பொருளாதாரம் பற்றியும் சிறந்த தெளிவு உள்ளது. எனவே, தேவையேற்படின் அவரிடம் ஆலோசனை பெறமுடியும். எம்மிடையே அரசியல் ரீதியிலான பிரச்னைதான் உள்ளது. மாறாக தனிப்பட்ட பிரச்னை கிடையாது-என்றார். (அ)

# மாதம்பை விபத்தில் இளைஞன் மரணம்!

கொழும்பு, மார்ச் 30

மாதம்பை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காக்காப்பள்ளிய பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மெதகம பகுதியை நோக்கிப் பயணம் செய்த டிமோ பட்டா ரக லொறியொன்றும், எதிர்த் திசையில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இந்திய கடன் எல்லை வசதியின் கீழ் ஐ.ஓ.சியிடமிருந்து டீசல் கொள்வனவு

கொழும்பு, மார்ச் 31

இந்திய கடன் எல்லை வசதியின் கீழ், லங்கா ஐ.ஓ.சியிடமிருந்து 6,000 மெற்றிக் தொன் டீசலை கொள்வனவு செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே இதனை தெரிவித்தார். அதற்கமைய அத்தியாவசிய சேவைகள் மற்றும் மின் உற் பத்தி நடவடிக்கைகளுக்கு இவ் வாறு டீசல் கொள்வனவு செய் யப்படுவதாக அமைச்சர் கூறினார். (அ)

# நாடு திரும்பி கஞ்சா வளர்த்தவர் கோப்பாய் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 31

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியவர் வீட்டில் கஞ்சா செடி வளர்த்த குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் இருந்து நாடு திரும்பி,உரும்பிராய் பகுதியில் வசித்து வந்த நபரே கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டில் பூஞ்சாடியில் கஞ்சா செடி வளர்ப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், குறித்த நபரின் வீட்டை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த பொலிஸார், அவரை கைது செய்ததுடன், வீட்டில் வளர்த்த கஞ்சா செடியை சான்று பொருளாக மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தொலைத்தொடர்பு கோபுரங்கள் செயல்படுவதில் நெருக்கடிநிலை



கொழும்பு, மார்ச் 31

மின்சாரம் துண்டிக்கப்படும் காலங்களில், தொலைத் தொடர்பு கோபுரங்களை இயங்க வைப்ப தற்கு தேவையான டீசலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த கோபுரங்களை செயற் படுத்துவதற்காக நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை மூவாயிரம் லீற்றர் டீசல் மின் பிறப்பாக்கிகளுக்கு விடுவிக் கப்பட்டுள்ளது.

மின்வெட்டு நீடிப்பதால் தொலைத்தொடர்பு கோபுரங் கள் செயற்படுவதில் இடையூறு ஏற்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான மின்பிறப் பாக்கிகளை இயக்குவதற்கு தேவையான எரிபொருளை அனைத்து சந்தர்ப்பங்களிலும் விநியோகிப்பதற்கு தமது அமைச்சு தயாராக உள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 10 மணித்தியாலங்களுக்கு மேல் அடுத்த வாரம் முதல் மின்வெட்டு?

## நெருக்கடி நிலை மேலும் வலுக்கிறது

**கொழும்பு, மார்ச் 31**

**அடுத்த வாரத்தில் இருந்து இலங்கையில் ஒரு நாளைக்கு 10 மணித்தியாலங்களுக்கு மேல் மின்வெட்டு ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபையின் உள்ளக தகவல்களை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

மின் உற்பத்தி நிலையங்கள் தேவையான எரிபொருளைப் பெறாவிட்டால், ஒரு நாளைக்கு 10 மணி நேரத்துக்கும் மேலாக மின்வெட்டினை நீட்டிக்கப்பட லாம் எனக் கூறப்படுகின்றது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தின் பணி கள் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை முற்றாக நிறுத் தப்பட்டிருந்த நிலையில் நேற்று முதல் பல பகுதிகளில் 10 மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஏனைய அனல்மின் நிலையங்கள் மூடப் படுவதைத் தடுக்க, எரிபொ ருளை அவசரமாக விநியோகிக் குமாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எரிசக்தி அமைச்சு தேவை யான அளவு எரிபொருளை வழங்கத் தவறினால், அடுத்த வாரம் முதல் 10 மணி நேரத் துக்கும் மேலாக மின்வெட்டு நீடிக்கப்படும் எனவும் எச்ச ரிக்கை விடுத்துள்ளதாக ஆங் கில ஊடகம் செய்தி வெளி யிட்டுள்ளது. (அ)

### மருந்து தட்டுப்பாடு காரணமாக

# சத்திர சிகிச்சைகளை மட்டுப்படுத்தியது கராப்பிட்டி போதனா வைத்தியசாலை!

கொழும்பு, மார்ச் 31

மருந்து தட்டுப்பாடு காரண மாக சத்திர சிகிச்சைகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக கராப் பிட்டி போதனா வைத்திய சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மயக்க மருந்துக்குப் பிறகு மீண்டும் சுயநினைவு பெற பயன்படுத்தப்படும் நியோஸ் டிக்மைன் என்ற மருந்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கராப் பிட்டிய போதனா வைத்திய சாலையில் அத்தியாவசிய சத்திர சிகிச்சைகள் மாத்திரமே இடம்பெற்று வருகின்றன.

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான கடனுதவிக் கடி தங்களை வழங்குவதற்கு முன்னு ரிமை வழங்கப்படாமையே மருந்து தட்டுப்பாடு பிரச்னைக்கு காரணம் என அரச மருந்தாளர் சங் கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# அராலி பகுதியில் வீட்டை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31

அராலிப் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து பெறுமதி யான கையடக்கத் தொலை பேசி மற்றும் பணம் என்பவை கொள்ளையிடப்பட்டுள்ளன.

அராலி வடக்கு, செட்டியார் மடம் பகுதியில் உள்ள வீடொன் றில் இருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த சமயம், வீட்டின் கதவினை உடைத்து உட்புகுந்த திருடர்கள், வீட்டில் இருந்த பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த கையடக்க தொலை பேசி உள்ளிட்டவற்றை திருடி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டுள்ள நிலையில் பொலி ஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (அ)

# எரிபொருள் பிரச்னைக்கு தீர்வு காண கைபேசி இலக்கம் வழங்கிய அமைச்சர்!



கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் நிரப்பு நிலை யங்களில் எரிபொருள் விநியோ கிப்பதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின், தமக்கு அறிவிக்கு மாறு வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே கோரியுள் ளார்.

இது தொடர்பில் தமக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக் குமாறும் அமைச்சர் தனது தொலைபேசி இலக்கத்தையும் ஊடகவியலாளர்களிடம் முன்வைத்தார்.

இதன்படி, 077-7414241 என்ற கைப்பேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு குறித்த பிரச்னை தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறும், அப்பிரச்னை களுக்குத் தீர்வு காண நடவ டிக்கை எடுப்பதாகவும் அமைச் சர் குறிப்பிட்டார். (அ)

# தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட்டனர் ரயில் சாரதிகள்

கொழும்பு, மார்ச் 31

மேலதிக நேர சேவைகளிலி ருந்து விலகி ரயில் சாரதிகளால் முன்னெடுக்கப்படவிருந்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையா டலை அடுத்து தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட் டுள்ளது.

ரயில் கட்டணத்தை 58 வீதமாக உயர்த்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முதல் ரயில் சாரதிகள் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டிருந்தனர். (அ)

# 8 நிமிடங்கள் மட்டுமே நீடித்த பங்குச் சந்தை நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 31

கொழும்பு பங்குச் சந்தை யின் நாளாந்த வர்த்தகம் இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்ப மாகிய போதிலும் 8 நிமிடங் கள் மட்டுமே நீடித்தது.

ஆஸ்ரீ ஸூடு20 சுட்டெண் முந்தைய நாளை விட 5 வீதம் குறைந்ததன் காரணமாக பங்கு வர்த்தகம் சுமார் 30 நிமிடங்க ளுக்கு இவ்வாறு இடைநிறுத் தப்பட்டுள்ளது.

அதன்படி, பங்குச் சந்தை யின் நாளாந்த வர்த்தகம் முற் பகல் 10.38 மணிக்கு நிறுத்தி வைக்கப்பட்டு, 11.08 மணிக்கு பங்குச் சந்தை மீண்டும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில் அனைத்து பங்கு விலை குறியீடு 358.64 புள்ளிகள் சரிந்து 9,288.91 புள்ளிகளாகவும், S&P SL20 சுட்டெண் 184.70 புள்ளி கள் சரிந்து 3,153.33 புள்ளிக ளாகவும் காணப்பட்டன.

இது முந்தைய நாளைக் காட்டிலும் 3.72% மற்றும் 5.53% வீழ்ச்சியாகும். (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஆய்வக சேவைகளும் மட்டுப்படுத்தல்

கொழும்பு, மார்ச் 31

கொழும்பு தேசிய வைத்தி யசாலையின் அனைத்து ஆய் வக சேவைகளையும் மட்டுப் படுத்த ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

மருந்து தட்டுப்பாடு காரண மாக இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கொழும்பு தேசிய வைத்தி யசாலையின் நிர்வாக அதிகாரி யால், சம்பந்தப்பட்ட பிரதா னிக்கு கடிதம் மூலம் அறியப் படுத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், நாடு முழுவ திலும் உள்ள பல வைத்திய சாலைகளில், புற்றுநோய், இருதய மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்காக பயன்படுத் தப்படும் மருந்துகள் தற்போது பெருமளவில் முடிவடைந்துள் ளதாக அரச ஔடதவியலாளர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு மாதங்க ளுக்குள், மேலும் பல மருந்து கள் தீர்ந்துபோகும் என அந்த சங்கம் எச்சரிக்கை விடுத்துள் ளது. (அ)

# கட்டணம் செலுத்தாதோரின் வீடுகளுக்கு மின் துண்டிப்பு

கொழும்பு, மார்ச் 31

பல மாதங்களாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத வாடிக்கையாளர்களின் வீடுக ளுக்கான மின்சாரத்தை துண் டிக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, மின்கட்ட ணத்தை செலுத்தாத வீடுகளின் பட்டியலை சேகரித்து அந்த நபர்களின் மின்சார இணைப் புக்களை துண்டிக்கும் பணி களை இலங்கை மின்சார சபை ஆரம்பித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகு திகளிலுள்ள பல வீடுகளில் நேற்று மின்சாரம் துண்டிக்கப் பட்டதாக தகவல்கள் தெரிவித் தன.

கொரோனா தொற்று கார ணமாக சில வாடிக்கையாளர் கள் பல மாதங்களாக கட்ட ணம் செலுத்தவில்லை எனவும், அவர்களுக்கு சில காலம் நிவா ரணம் வழங்கப்பட்டுள்ளதா கவும் இலங்கை மின்சார சபை யின் சிரேஷ்ட பேச்சாளர் ஒரு வர் குறிப்பிட்டார். (அ)

# பொது போக்குவரத்தில் தாக்கம் செலுத்தும் எரிபொருள் நெருக்கடி

கொழும்பு, மார்ச் 31

எரிபொருளுக்கு தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுப் போக்குவரத்து சேவைக்கும் பாரிய இடையூறு ஏற்பட் டுள்ளது.

இதன் காரணமாக 25 வீத மான தனியார் பஸ்கள் மாத் திரமே போக்குவரத்தில் ஈடுபடு வதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, 06 டிப்போக் களுக்கு கோரப்பட்ட எரி பொருள் கிடைக்கவில்லை என வும் பிரச்னைகளை தீர்ப்பதற் கான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வருவதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபை குறிப்பிட்டுள்ளது.

நெரிசல் மிகு சந்தர்ப்பங் களில் பஸ் சேவைகளின் முன்னுரிமை அடிப்படையில் அட்டவணை தயாரிக்கப்படுவ தாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் ஏ.எச்.பந்துல ஸ்வரனஹன்ச தெரிவித்தார். (அ)



# சர்வகட்சி மாநாடும் சர்வதேச நகர்வுகளும்

**நா.யோகேந்திரநாதன்**

**இலங்கையைப் பொறுத்தவரையில் அரச செலவினங்களைக் குறைத்தல் என்பன ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. பல்வேறு வழிவங்களில் வழங்கப்பட்டு வந்த அரச மானியங்கள் வெட்டப் பட்டு விட்டன. சாதாரண நாளாந்த பாவனைப் பொருட்கள் முதற் கொண்டு ஏனைய இறக்கு மதிப் பொருட்கள் வரை நிர்ணய விலைகள் நீக்கப்பட்டு விட்டன.**

தேசிய அளவிலோ அல்லது சர்வதேச மட்டத்திலோ பாரிய பிரச்சினைகள் எழும்போது அவைக்கான தீர்வு முயற்சிகள் இரு வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று பேச்சுவார்த்தை மற்றது போர். பேச்சுவார்த்தை ஒரு கட்டத்தில் போராக வெடிப்பதும், போர் ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தை வடிவுக்கு இறங்கிப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படுவதுமுண்டு.

பேச்சுவார்த்தைகளில் இரு ரகங்கள் உண்டு. ஒன்று - இரு தரப்பினரும் மூன்றாவது தரப்பின் அனுசரணையுடனோ அல்லது அது இல்லாமலோ பேச்சுகளை நடத்தித் தீர்வை எட்டுவது. இது சில சமயங்களில் வெற்றி பெறுவதுமுண்டு; சுமூகமாக நகர்ந்து சென்று இறுதிக் கட்டத்தில் குழம்பிப் போய் விடுவதுமுண்டு. மற்றது - சர்வகட்சி அல்லது சர்வமத மாநாடு. இது பிரச்னைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமின்றி வேறு தரப்பினரும் கலந்து கொண்டு முடிவுக்கு வருவது.

இலங்கையைப் பொறுத்த வரை இரு தரப்பினருக்கிடையே இடம்பெற்ற பேச்சுகள் வெற்றி பெற்றுள்ளன் சில வெற்றி வரை சென்று இறுதியில் குழம்பியுள்ளன. ஆனால் சர்வகட்சி மாநாடுகள் பிரச்சினைகளைக் குழப்பவும், இழுத்துப் பறிக்கவும், நீர்த்துப் போக வைக்கவுமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

இப்படியான நிலையில் அண்மையில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் தற்போது இலங்கை எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது தொடர்பான ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பாக கொழும்பில் ஒரு சர்வகட்சி மாநாடு இடம்பெற்றது. இதில் பல கட்சிகள் தாம் கலந்து கொள்ளப் போவதில்லையென அறிவித்திருந்த போதிலும் இது 90 வீதம் வெற்றிகரமாக இடம்பெற்றதாகவே கூறவேண்டும். ஏனெனில் ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட முக்கிய கட்சிகள் உத்தியோக பூர்வமாகக் கலந்து கொள்ளாவிட்டாலும் அதன் உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர். அதே போன்று அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் பதினொன்றின் சார்பில் இருவர் கலந்து கொண்டனர்.

இதில் இன்னுமொரு முக்கிய விடயம் இம்மாநாட்டில் இலங்கை யில் பிரதான அரசியல் கட்சிகளாகச் சர்வதேச மட்டத்தில் நோக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன கலந்து கொண்டு காத்திரமான பங்களிப்பை வழங்கின. முன்னாள் ஆயுதக் குழுக்களின் சார்பில் “புளொட்” சித்தார்த்தன் கலந்து கொண்டார். ரணில், சம்பந்தன் ஆகியோரின் உரைகள் மிகக் கௌரவத்துடன் வரவேற்கப்பட்டதுடன், அவர்கள் கருத்துக்கு எதிர்ப்புகள் எதுவும் கிளம்பவில்லை. அதுமட்டுமின்றி மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் கடந்த நல்லாட்சி அரசாங்கம் தொடர்பாக தெரிவித்த ஒரு கருத்துக்காக ஜனாதிபதி ரணிலிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

அவ்வகையில் இம்மாநாடு வெற்றிகரமாக அமைந்தது என்பதற்கு முதலாவது காரணமாக முன்வைக்கமுடியும்.

அதேவேளையில் இம்மாநாட்டின் இன்னுமொரு வெற்றியையும் குறிப்பிடாமல் விடமுடியாது. இன்றைய பொருளாதார நெருக்கடி, மற்றும் அதன் முழுச் சுமைகளையும் மக்கள் தலைமேல் சுமத்தி மக்களின் வறுமை நிலையை அதல பாதாளத்துக்குத் தள்ளாமல், பாவனைப் பொருட்களின் தொடர்ச்சியான விலை அதிகரிப்பு என்பனவற்றுக்கு எதிராக ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினால் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பல இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் ஆட்சியாளர்களுக்கெதிராகத் தீவிர கோஷங்கள் எழுப்பப்பட்டன. இது ராஜபக்ஷ் சகோதரர்கள் ஆட்சியை ஒரு உலுப்பு உலுப்பிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சர்வகட்சி மாநாட்டுக்கு ஆதரவாகவும் எதிராகவும் அரசியல் கட்சிகளாலும் ஊடகங்களாலும் அமெரிக்கா உட்பட்ட வெளிநாட்டுத் தூதரகங்களாலும் வழங்கப்பட்ட முக்கியத்துவம் ஜே.வி.பி. பேரணியின் தீவிரத்தை மழுங்கடித்து விட்டது. இன்றைய அரசாங்கத்தை மக்கள் மத்தியில் அம்பலப் படுத்தும் ஒரு காத்திரமான குரல் காற்றோடு காற்றாகக் கரைந்தது போன்று அது அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது.

அதுமட்டுமின்றி அதில் பேசப்பட்ட விடயங்கள், அவை சுமுகமான முறையில் முரண்பாடுகள் எழாமல் பேசப் பட்ட முறைமை, சில விடயங்களுக்குத் தீர்வு காணும் வழிகள் கூறப்பட்டவை எல்லாம் மக்கள் மத்தியில் ஒரு நல்லெண்ணத்தை உருவாக்கும் வகையில் அமைந்திருந்தன.

எனவே இம்மாநாட்டைப் பொறுத்த வரையில் தேசிய அளவில் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்துக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே கூறவேண்டும்.

அதேவேளையில் சர்வதேச மட்டத்தில்கூட உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், வேறுசில நாடுகள் என்பன தற்போதையை நெருக்கடிகளிலிருந்து மீளவும், நிலையான பொருளாதார அபிவிருத்தியை நோக்கிமுன் செல்லவும், நிபந்தனைகளின் அடிப் படையில் நிதியுதவி வழங்கச் சம்மதித்துள்ளன.

இம்மாநாடு நிறைவு பெற்ற அடுத்த நாளில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு தேசியப் பாதுகாப்பை உறுதிப் படுத்துதல், அரச டொலர் கையிருப்பை ஸ்திரமாகப் பேணல் போன்ற நிபந்தனைகளுக்கு அமைவாக நிதியுதவி வழங்கவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்தன.

அடிப்படையில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பன சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நிதியுதவிகளை வழங்குவதுண்டு. அவற்றில் அரச செலவினங்களைக் குறைத்தல், தனியார் துறைகளை ஊக்குவித்தல் முக்கியமானவையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரச செலவினங்களைக் குறைத்தல் என்பன ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. பல்வேறு வடிவங்களில் வழங்கப்பட்டு வந்த அரச மானியங்கள் வெட்டப்பட்டு விட்டன. சாதாரண நாளாந்த பாவனைப் பொருட்கள் முதற்கொண்டு ஏனைய இறக்குமதிப் பொருட்கள் வரை நிர்ணய விலைகள் நீக்கப்பட்டு விட்டன. இறக்குமதியாளர்களும் வர்த்தகர்களும் சுமைகளை மக்கள் தலைமேல் சுமத்தி கொள்ளையடித்து வருகின்றனர். டொலர் மிதக்க விடப்பட்டதன் மூலம் அதன் பெறுமதி அதிகரிக்க பொருட்களின் விலைகள் வானேறி விட்டன. போதாமைக்கு அரசாங்கமும் சில பொருட்களுக்கு இறக்குமதி வரியை அதிகரித்துள்ளது. எனவே அரச செலவினங்களைக் குறைத்தல் என்பது ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பித்து விட்டது. சில சமயம் இம்மாநாட்டின் பின்பு அது மேலும் அதிகரிக்கலாம்.

அடுத்து தனியார் துறையை ஊக்குவிப்பது என்பனத இலங்கைக்குப் புதிய விடயமல்ல. எனினும்கூட அது மேற்குலக நாடுகள் சார்பாக வலுப்பெற்று வருவதை அவதானிக்க முடியும்.

குறிப்பாக மின் உற்பத்தித் திட்டங்கள், திருமலை கடற்படைத் தள, பொருளாதார மைய விஸ்தரிப்பு போன்றவற்றில் அமெரிக்காவுடன் நெருக்கமாகி வரும் உறவு கவனிக்கத்தக்கது.

அதாவது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வழங்குவதற்கான நிபந்தனைகள் ஏற்கனவே இலங்கையால் வேகமாக நிறைவேற்றப்பட்டு வரும் வேளையில் ஏன் இப்படி ஒரு சர்வகட்சி மாநாடு என்றொரு கேள்வி எழலாம்.

ஒன்று-இதுவரை இலங்கை சீனாவில் காலூன்றி நின்று மேற்குலகுடன் தேவைகள் நோக்கி உறவுகளைப் பேணி வந்தமை போன்று இனி மேற்குலகில் காலூன்றி நின்று சீனாவைப் பயன்படுத்தப் போவதான ஒரு மறைமுகப் பிரகடனமாகவும் இருக்கலாம்.

இரண்டு - அமெரிக்கா தலைமையிலான உலக மயமாதல் வலைப் பின்னலில் இலங்கை இறுக்கமாகப் பிணைக்கப்படுவதற்கு இலங்கையின் சகல கட்சிகளும் தங்கள் சம்மதத்தை சர்வகட்சி மாநாட்டின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளன என்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதும் நோக்கமாக இருக்கலாம்.

எப்படியிருந்தபோதிலும் சர்வகட்சி மாநாடு ஒரு வெற்றிகரமானது என்பேத வெளியே தெரியும் ஒரு தோற்றமாகும். ஆனால் யானை பார்த்த குருடர்கள் போன்று ஒவ்வொருவரும் தமக்கே வெற்றி எனக் கருதிக் கொண்டிருந்த போதும், படுதோல்வி இந்த நாட்டின் சாதாரண மக்களுக்கே என்பதில் சந்தேகமில்லை.

வறுமை, பட்டினிச்சாவு, கடன் தொல்லை, வாழ்வாதார வசதிகள் இழப்பு என்றுமே தலைநிமிர முடியாத ஏழ்மை என்பவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்கள் அவர்களே.

**- அருவி**

# பிரச்னைக்குத் தீர்வு வரும்வரை புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள்




## சுமந்திரன் சொல்கிறார்

கிருஷ்ணகுமார்

ஜனாதிபதி எங்களுடன் பேச வர வேண்டும் என்றே தமிழ்க் கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்தன. பேச வாருங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு பேச்சுவார்த்தைக்குத் திகதி கொடுக்கும் போது பேச மாட்டோம் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கின்றது? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வியெழுப்பினார்.

மட்டு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். இந்த ஊடக சந்திப்பின் போது சுமந்திரன் தெரிவித்த விடயங்கள் வருமாறு.

திங்கட்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தோம். அதில் முக்கியமாக கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை சம்மந்தமாக பேசப்பட்டது.

உடனடி விடயங்களில் நீண்டகால தமிழ் அரசியற் கைதிகளின் விடுவிப்பு சம்மந்தமாக உடனடி நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நீதியமைச்சரும் நானும் இது சம்மந்தமாக ஒவ்வொருவர் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு எங்களின் சிபார்சினைச் செய்வோம். அதுபோல் அண்மையில் கைது செய்து விசாரணை இல்லாமல் இருப்பவர்களை ஏற்கனவே விடுவிப்பதாகச் சொன்னார்கள் அந்த விடயத்தை மிகத் துரிதமாகச் செய்து அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்படாவிட்டால் அவர்கள் தெடர்பில் மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

நில அபகரிப்பு தொடர்பில் நீண்ட பேச்சுவார்த்தை நடத்தினோம். வெவ்வேறு சட்டங்களின் அடிப்படையில் எமது நிலங்கள் அபகரிக்கப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர்கள் இணங்கினார்கள். அதற்கப்பால் நிருவாக எல்லைகளை மாற்றுகின்ற முயற்சி நடைபெறுகின்றது. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கான அறிவிப்பை தாம் உடனடியாக வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்தார். இராணுவத் தேவைக்காகப் புதிய சுவீகரிப்புகள் செய்யப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கென்று ஒரு விசேட அபவிருத்தி நிதியமொன்று உருவாக்குவதற்கு அரசாங்கம் இணங்கியிருக்கின்றது. அது எவ்வாறு என்ற விடயங்கள் இன்னும் பேசப்படவில்லை. இது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் பேசி முதலீட்டாளர்களை எவ்வாறு வருவிப்பது என்பது தொடர்பிலும் கலந்துரையாடுவோம். இந்த நான்கு விடயங்கள் சம்மந்தமாக அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது. நிருவாக எல்லைகள் சம்மந்தமாகவும் நாங்கள் பேசியிருக்கின்றோம். அதிலே கல்முனை வடக்கு சம்மந்தமான விடயம் உள்ளிட்டவையும் பேசப்பட்டன. அவை தொடர்பில் விவரமாகச் சொல்லப்படாவிட்டாலும் இனிவரும் நாட்களில் அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் பேசும் போது அந்த விடயத்தைப் பற்றியும் பேசுவோம். மகாவவலி இடங்கள், மாவட்ட, பிரதேச செயலக எல்லைகள் மாற்றியமைக்கின்ற விடயங்கள் பற்றியும் இனிவரும் காலங்களில் பேசுவோம். ஆனால் அவையெல்லாம் உடனடியாக நிறுத்தப்படும் என்கிற வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவிக்கும் போது இது நல்ல விடயங்கள் உடனடி விடயங்களுக்கான தீர்வை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சியை எடுக்க வேண்டும் என்ற ஆலோசனை எங்களுக்கு வழங்கப்பட்டது. அரசாங்கத்தின் புதிய அரசிலமைப்புக்கான இடைக்கால அறிக்கை வெளிவந்தவுடன் அரசியற் தீர்வு விடயம் பற்றிப் பேசலாம் என்ற விடயம் சொல்லப்பட்டிருந்தது. அந்த அறிக்கை வந்து அதற்கு அவர்கள் பேசுவதற்குத் தயாராகின்றபோது நீங்கள் உங்கள் நிலைப்பாட்டில் இறுக்கமாக இருந்து பேசுங்கள். அதற்கு முன்னதாக அவர்கள் இணங்கிய விடயங்களைச் செய்வதற்கு உங்கள் ஒத்துழைப்புகள் தேவையான இடங்களில் உங்கள் ஒத்துழைப்புகளை வழங்குங்கள் என்றும் சொல்லியிருக்கின்றார்.

**கேள்வி :** ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பு திருப்திகரமானதாக இருந்ததா?

**பதில் :** முதலாவது கூட்டத்திற்குப் போய் வந்து விட்டு திருப்திகரமானதாக இருந்ததா, இல்லையா என்று பதில் சொல்ல முடியாது. ஒரு கூட்டத்திற்குச் சென்றிருக்கின்றோம். அதில் சில வாக்குறுதிகள் கொடுத்திருக்கின்றார்கள். சிலர் கேட்கின்றார்கள் இந்த வாக்குறுதிகளை நம்புகின்றீர்களா என்று இது பொருத்தமற்ற ஒரு கேள்வி. நம்பினாலும் நம்பாவிட்டாலும் அவர்கள் வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள். அதனை அவர்கள் நிறைவேற்றுவார்களா என்று பார்ப்போம். நம்பினால் மட்டும் தான் பேச வேண்டும் என்று நினைப்பது முட்டாள்தனம். அதிகாரம் அவர்கள் கையிலே இருக்கும் போது நாங்கள் அவர்களுடன் தான் பேச வேண்டும். நாங்கள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம்.

**கேள்வி:** அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காகவே கூட்டமைப்பு பேச்சில் கலந்து கொண்டது என சில தமிழ்க் கட்சிகளும், காணாமல் போனோர் சம்மந்தமான அமைப்புகளும் குற்றஞ் சாட்டியுள்ளன...?

**பதில்:** அரசாங்கத்தில் இருப்பவர்களுடன் தான் நாங்கள் பேச வேண்டும். நீண்ட காலமாக அரசாங்கம் எங்களோடு பேச வேண்டும் என்று கோரியிருந்தோம். அண்மையில் கூட பாராளுமன்றத்தில் பிரதிநிதித்தவப்படுத்துகின்ற அனைத்துத் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களும் ஜனாதிபதி எங்களுடன் பேச வரவேண்டும் என்றே ஆர்ப்பாட்டம் செய்தோம். பேசவாருங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு அவர் பேச்சுவார்த்தைக்குத் திகதி கொடுக்கும் போது பேச மாட்டோம் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கின்றது?

**கேள்வி :** வடமாகாணத்திலுள்ள மூன்று தீவுகளை உற்பத்தி செயற்பாட்டொன்றுக்காக இந்தியாவிற்கு வழங்குவதற்கான ஒப்பந்தமொன்ற கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

**பதில் :** இதனை நாங்கள் வரவேற்கின்றோம். நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். இந்தியத் திட்டங்கள், இந்திய முதலீட்டுத் திட்டங்கள் வடக்கு கிழக்கில் வருவதை நாங்கள் முற்றமுழுதாக வரவேற்கின்றோம். அது எங்களுக்குப் பலமாக இருக்கும். ஆகையினாலே இந்தியாவிற்கு இந்தத் திட்டங்கள் கொடுக்கப்பட்டது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

**கேள்வி :** ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது சர்வதேச விசாரணை வேண்டுமென்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட அதேவேளை காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக உள்ளக விசாரணைகளை வலியுறுத்துவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. அவ்வாறாயின் சர்வதேச விசாரணையைக் கோரிய கூட்டமைப்பு உள்ளக விசாரணைக்கு இணங்கிவிட்டதா?

**பதில் :** உள்ளக விசாரணை என்று நாங்கள் சொல்லவே இல்லை. ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நீங்கள் பார்த்தீர்களாக இருந்தால், குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாக வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக சட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே நடத்தப்படுகின்ற விசாரணைகளில் சர்வதேச நிபுனர்களும் பங்குபெறலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே அந்த அலுவலகத்தினூடாக நடத்தப்படுகின்ற விசாரணையாக இருக்கலாம் அல்லது வேறு ஒரு பொறிமுறையாக இருக்கலாம். அல்லது இந்த விசாரணை சம்மந்தமாக அவர்களுக்குள்ளேயே இரு நிலைப்பாடு வந்தது. நீதியமைச்சர் சொன்னார் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினூடாக விசாரணைகளை மேற்காள்ளலாம் என்று. அமைச்சர் பீரிஸ் சொன்னார் தென்னாபிரிக்காவின் உதவியோடு நாங்கள் உண்மை கண்டறியும் பொறிமுறையொன்றை உருவாக்குகின்றோம். அதன் மூலம் இதனைச் செய்யலாம் என்று சொன்னார். இந்த இரண்டிலும் சர்வதேச ஈடுபாடு இருக்கின்றது. ஆகையினால் விசாரணை வேண்டும் என்று நாங்கள் கோரியதற்கு அரசாங்கம் அதற்கு இணங்கியமையை வைத்துக் கொண்டு உள்ளக விசாரணைக்காக நாங்கள் கோரிக்கை வைத்தோம் என்று சொல்வது எந்தவிதத்திலும் நியாயமான கூற்று அல்ல.

**கேள்வி :** இந்திய முதலீட்டாளர் வடக்கு கிழக்கில் முதலீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டதா? குறிப்பாக புலம்பெயர் முதலீட்டாளர்கள் நேரடியாக முதலீடுகளை மேற்கொள்ளாமல் இந்திய முதலீட்டாளர்களின் ஊடாக முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் உள்ளனவா?

**பதில் :** நான் சென்னைக்குச் சென்றபோது தமிழ் நாட்டின் நிதியமைச்சரோடு நீண்ட பேச்சுவார்ததைகளை நடத்தியிருக்கின்றேன். அதன் தொடர்ச்சியாக பல முன்னெடுப்புகள் தற்போது நடைபெறுகின்றன. அதிலொன்று தமிழ் நாட்டிலிருந்து வரும் முதலீட்டாளர்கள் புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களையும் இணைத்துக் கொண்டு வருகின்ற திட்டமும் இருக்கின்றது. அந்தப் பொறிமுறையை ஏற்படுத்த நாங்கள் முயல்கின்றோம். அதிலே நேரடியாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பாத இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தினர் தமிழ்நாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து வர விரும்பினால் அதற்கான ஒரு வழியையும் நாங்கள் ஏற்படுத்துகின்றோம்.

சர்வ கட்சி மாநாட்டிலே இந்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது நான் சொன்ன ஒரே ஒரு விடயம் இந்த நாட்டிலே தேசியப் பிரச்சனைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கின்ற ஒரு தீர்வு வரும்வரைக்கும் புலம்பெயர்ந்த மக்கள் இங்கு முதலீட்டுக்கு வரமாட்டார்கள் என்பதை நான் சொல்லியிருந்தேன். ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது இன்னுமொரு விடயத்தையும் நான் கூறியிருந்தேன். புலம்பெயர்ந்த மக்கள் அமைப்புகளையும், தனியார்களையும் தடை செய்தவிட்டு அவர்களை வருமாறு அரசாங்கம் அழைப்பதில் அர்த்தமில்லை. ஆகையால் இந்த விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அவர்கள் வருவார்கள் என்று பகல் கனகாண வேண்டிய அவசியம் கிடையாது. அரசியற் தீர்வொன்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்டால் தான் அதைப்பற்றி நாங்கள் பேச முடியும்.

**கேள்வி:** இலங்கை மீது சர்வதேசத்தின் பாரிய அழுத்தம் இருக்கும் இந்த நிலைமையில் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றோம் என்ற தொனியை ஏற்படுத்தி தம்மீதான அழுத்தங்களைக் குறைப்பதற்கான நட வடிக்கைகள் ஏதும் முன்னெடுக்கப்படுவதாக நீங்கள் சந்தேகிக்கின்றீர்களா?

**பதில்:** எங்களோடு பேச்சுவார்த்தை நடத்திய காரணத்தினால் நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கவாரங்கள் எல்லாம் மாறப்போவதில்லை. கொடுத்த கடன் குறையப் போவதில்லை. ஆகையால் அதற்கும் இதற்கும் சம்மந்தம் இருப்பததாகத் தெரியவில்லை. பொருளாதார நிலையில் இருந்து மீள்வதற்கு வேறு பல விடயங்களை அரசாங்கம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. கடன் கொடுத்த நாடுகளுடன் அமைப்புகளுடன் அந்தக் கடன்களை மீளமைப்பதற்கான முயற்சிகளைத் தான் செய்ய வேண்டுமே தவிர கூட்டமைப்புடன் பேசுவதால் அந்த நிலைமை மாறப்போவதில்லை.

**கேள்வி :** கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் செயலணி மற்றும் மயிலத்தமடு, மாதவணை போன்ற பிரச்னைகள் விஸ்வரூபமாக உள்ளன. இவை தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டனவா?

**பதில்:** அவை சம்மந்தமாகவும் பேசினோம். மயிலத்தமடு, மாதவணை விடயத்தை பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் விவரமாக எடுத்துச் சொன்னார். அத்துடன் தென்னைமரவாடியில் மக்களை பயிர் செய்யவிடாமல் தடுப்பது தொடர்பிலும் எடுத்துச் சொன்னோம். அதன்போது ஒரு உத்தரவு கொடுக்கப்பட்டது.

நீண்டகாலமாக பயிர்ச்செய் யும் இடத்தை எந்தத் திணைக்களமும் தடுக்கக் கூடாது. பிரதேச செயலாளரின் அத்தாட்சி கொடுக்கும் பட்சத்தில் அந்த நடவடிக்கையை எந்தத் திணைக்களமும் தடுக்கக் கூடாது என்ற உத்தரவு பிறப்பிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

39. குறித்த வேளையில் உணவை உண்ணாமல் இருப்பதால் ஏற்படத்தக்க ஒரு நோய்.
(1) உயர்குருதி அமுக்கம் (2) இரைப்பையழற்சி (3) நீரிழிவு

40. உடலுக்குச் சக்தியைத் தரும் உணவு.
(1) வல்லாரை (2) இறைச்சி (3) உருளைக்கிழங்கு

41. ஈக்கள் மொய்த்த உணவுகளை உண்பதால் ஏற்படத்தக்க நோய்.
(1) கழிச்சல் (2) நீர்வெறுப்பு (3) மலேரியா

42. பின்வரும் பிராணிகளுள் ஊர்வன அல்லாதது.
(1) தவளை (2) உடும்பு (3) ஆமை

43. 
படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?
(1) திருகு ஆணியைச் சுழற்றுவதற்கு
(2) மரப்பலகையில் துளையிடுவதற்கு
(3) தகட்டினை வெட்டுவதற்கு

44. பின்வருவனவற்றுள் இலங்கையின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
(1) கரப்பந்தாட்டம் (2) வலைப்பந்தாட்டம் (3) சடுகுடு

45. பயணத்திற்காகப் பாதையைப் பயன்படுத்தும் போது நாம் செய்யக் **கூடாதது.**
(1) கூட்டமாகச் சேர்ந்து உரையாடியபடி பயணித்தல்
(2) நடந்து செல்கையில் பாதையின் வலது புறத்தைப் பயன்படுத்துதல்.
(3) பாதையைப் பரிசீலிக்காது பாதைக்கு ஓடிச் செல்வதைத் தவிர்த்தல்.

46. 
பாடசாலையில் தயாரிக்கப்பட்ட கூட்டெருப் பாத்திரம் அருகே தரப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தினுள் இடக்கூடிய கழிவுப் பொருட்களில் இரண்டு.
(1) யோகட் கோப்பை, பொலிதீன் உறை
(2) கடதாசித்துண்டுகள், இலைகுழைகள்
(3) இலைகுழைகள், கண்ணாடித்துண்டுகள்

47. எரிகாயத்திற்கு உள்ளான ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது **செய்யக்கூடாதது.**
(1) எரியுண்ட இடத்தைக் குளிர்நீரினால் குளிரூட்டல்.
(2) எரியுண்ட இடத்தை மூடுதல்.
(3) எரிவின் மேல் எண்ணெய் அல்லது கொழுப்புகளைப் பூசுதல்.

48. பயிர்ச் செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணிகள்,
(1) தண்டுகோதி, நத்தை (2) தேனீ, ஆந்தை (3) மண்புழு, தேனீ

49. கண்கள் காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெறக்கூடிய ஊடகம்,
(1) வானொலி (2) செய்திப்பத்திரிகை (3) தொலைக்காட்சி

50. சிவப்பு, வெள்ளை ஆகிய நிறங்களைக் கலப்பதால் பெறப்படும் நிறம்,
(1) ரோஸ் (2) செம்மஞ்சள் (3) கபிலம்

51. மின்குமிழ் ஒளிராத சுற்றினைக் காட்டும் வரிப்படம் எது?


(1) (2) (3)

52. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் சேர்க்கக் **கூடாத** ஒரு பொருள்.
(1) கொறுக்காய் (2) இஞ்சி (3) கறுவா

53. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ள இலங்கையின் இயற்கை இடங்களில் ஒன்று.
(1) சிகிரியா (2) பொலன்னறுவை புராதன நகர் (3) சிங்கராஜ வனம்

54. ஒருவர், வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டியது.
(1) பிரதேச செயலாளரிடம் (2) சமுர்த்தி அலுவலரிடம் (3) கிராம அலுவலரிடம்

55. தான் சஞ்சரிக்கும் மேற்பரப்புகளில் ஒட்டிக்கொள்ளக் கூடிய விசேட பாதங்களைக் கொண்டுள்ள பிராணி,
(1) பல்லி (2) அணில் (3) கரப்பான்

56. உறுதியற்ற சதுப்பு நிலச்சூழலில் வளரும் கண்டல் தாவரங்கள் அசைவின்றி, தம்மை நிலைப்படுத்துவதற்கு அவை கொண்டுள்ள விசேட வேர்க் கட்டமைப்பு எது?
(1) மூச்சு வேர் (2) மிண்டி வேர் (3) தொங்கு வேர்

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30. (3) | 31.(1) | 32. (1) | 33. (2) | 34. (2) | 35. (1) | 36. (3) | 37. (3) | 38. (2) | 39. (2) |
| 40. (3) | 41.(1) | 42. (1) | 43. (2) | 44. (3) | 45. (1) | 46. (2) | 47. (3) | 48. (1) | 49. (3) |
| 50. (1) | 51.(1) | 52. (1) | 53. (3) | 54. (3) | 55. (1) | 56. (2) | | | |

## கல்வி tv CHANNEL-1

**31.03.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**31.03.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கடும்வெயிலின் மத்தியிலும் எரிபொருளுக்கு மக்கள் வரிசை!





மட்டக்களப், மார்ச் 31

**மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்கு நேற்றும் மக்கள் நீண்ட வரிசையில் கடும் வெயிலுக்கும் மத்தியில் முண்டியடித்தனர்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிவாயு உட்பட எரிபொருட்கள் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் குறைந்தளவிலேயே விநியோகம் செய்யப்படுகின்றது.

இதன்காரணமாக தினமும் மக்கள் நீண்ட வரிசைகளில் கடும் வெயிலில் நின்றே எரிவாயு, மண்ணெண்ணெய் என்பவற்றை கொள்வனவு செய்தமையை அவதானிக்க முடிந்தது.

எனினும், எரிவாயுவுக்காக ஏராளமான மக்கள் காத்திருந்த போதும் விநியோகஸ்தர்கள் எரிவாயுவை விநியோகிக்கவில்லை. இதனால் சில மணி நேரம் காத்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (ஐ)

## ஹெரோயினுடன் நால்வர் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு - வாழைச்சேனை, பிறந்துறைச்சேனை பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்றுமுன் தினம் இரவு கைது செய்ததாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் இரவு குறித்த பிரதேசத்தில் பொலிஸார் சுற்றிவளைத்த போது, அங்கு ஹெரோயின் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டு கொண்டிருந்த 4 பேரை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 50 மில்லிக்கிராம் ஹெரோயினை மீட்டுள்ளனர்.

கைதானவர்கள் 25 - 30 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும், இவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகியவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மடக்களப்பில் கஞ்சா விற்கமுயன்ற பளையை சேர்ந்த நால்வர் சிக்கினர்!

சந்திவெளி, மார்ச் 31

பளையில் இருந்து மட்டக்களப்பு - சந்திவெளி பிரதேசத்துக்கு பஸ்ஸில் கஞ்சாவை கடத்தி வந்து அதனை விற்பனைக்காக பற்றைக் காட்டுக்குள் மறைவாக பொதி செய்து கொண்டிருந்த நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதான நால்வரும் கிளிநொச்சி - பளையை சேர்ந்தவர்க ளாவர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, பற்றைக்காட்டுப் பகுதி முற்றுகையிடப்பட்டது. இதன்போதே, 165 கிராம் கேரளா கஞ்சாவை விற்பனைக்காக பொதி செய்து கொண்டிருந்த நால்வரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள், பளை, இத்தாவில் பகுதியைச் சேர்ந்த 29, 24, 24 மற்றும் 25 வயதுடையவர்கள் எனவும் இவர்களில் ஒருவர், மட்டு. கல்குடா பிரதேசத்தில் திருமணம் முடித்துள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது.

அத்துடன், இவர்களில் இருவர் பஸ்ஸில் கஞ்சாவை கடத்தி வந்துள்ளனர் எனவும் மற்றைய இருவர் மோட்டார் சைக்கிளில் சந்திவெளிக்கு வந்தவர்கள் என்றும் பொலிஸாரின் முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சந்திவெளி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## சுரவணையடியூற்றில் ஆரம்ப பாடசாலை திறப்பு



போரதீவுப்பற்று, மார்ச் 31

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுரவணையடியூற்று பகுதியில் புதிய ஆரம்பப் பாடசாலை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முன்மொழிவுகளுக்கு அமைவாக பின்தங்கிய மாணவர்களின் நலன்கருதி இப்பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதியான சுரவணையடியூற்றில் உள்ள மாணவர்கள் நீண்டகாலமான நீண்டதூரம் பயணித்து கல்வி பெறவேண்டிய நிலை காரணமாக இப்பகுதி மக்கள் தொடர்ச்சியான கோரிக்கையை முன்வைத்துவந்தனர்.

சுமார் 10வருடத்திற்கு மேலாக இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துவந்த நிலையில் பாடசாலையின் ஆரம்ப நிகழ்வு கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார். (ஐ)

## எரிபொருள் விலையேற்றம் கண்டித்து நேற்று போராட்டம்!



கிண்ணியா, மார்ச் 31

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை சேர்ந்த கிண்ணியா நகர சபை உறுப்பினர் முஸ்தபா நஸ்ருதீன் நகர சபையின் 48 அமர்வுக்கு, நேற்று முன்தினம் சைக்கிளில் சென்றார்.

“பொருள்களின் விலையேற்றத்தால் மக்களின் வாழ்க்கையை வதைக்காதே”, “எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியவசியப் பொருள்களின் விலையேற்றத்தை உடன் நிறுத்து” போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகையை சைக்கிளில் வைத்திருந்தார். அத்தோடு, சபை அமர்விலும் எரிபொருள், எரிவாயு, அத்தியவசியப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களின் விலையேற்றத்தை எதிர்த்து பிரேரணை ஒன்றையும் அவர் சபையில் முன்வைத்தார். (ஐ)

## ஓட்டோவில் கஞ்சா கடத்தல் இருவர் பொலிஸாரால் கைது!

கொக்கட்டிச்சோலை, மார்ச் 31

காத்தான்குடியில் இருந்து கருவேப்பங்கேணி பிரதேசத்துக்கு ஓட்டோவில் கேரளா கஞ்சாவை எடுத்துச் சென்று விற்பனையில் ஈடுபட்ட கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.



மாவட்ட புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து, மட்டு. தலைமையக பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவினருடன் மாவட்ட புலனாய்வு பிரிவினரும் இணைந்து குறித்த பகுதியில் உள்ள வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது கேரளா கஞ்சாவை வியாபாரத்துக்கு ஓட்டோவில் எடுத்து வந்த இருவரையும் மடக்கிபிடித்து கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து 90 கிராம் கேரளா கஞ்சா மற்றும் ஓட்டோவையும் கைப்பற்றினர்.

கைதானவர்கள் கொக்கட்டிச்சோலை - மகிழடித்தீவை சேர்ந்த 46, 37 வயது நபர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு





## நேட்டோ உச்சி மாநாடு; உக்ரைனுக்கு அழைப்பு!

பிரஸ்ஸல்ஸ், மார்ச் 31

பிரஸ்ஸல்ஸில் நடைபெறவுள்ள நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு உக்ரைனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் நேட்டோ பொதுச் செயலாளர் தலைமையில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இதில் அவுஸ்திரேலியா, பின்லாந்து, ஜோர்ஜியா, ஜப்பான், நியூசிலாந்து, சுவீடன், கொரியா குடியரசு ஆகிய நாடுகளும் பங்கேற்குமாறு அழைக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியதில் இருந்து 30 நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களால் கூட்டம் கூட்டப்படுவது இது 2-ஆவது முறையாகும்.

சில அமைச்சர்கள் வீடியோ இணைப்பு மூலம் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாகிஸ்தானில் ஆட்சி கவிழுமா?

## பெரும்பான்மையை இழந்தது அரசு

இஸ்லாமாபாத், மார்ச் 31

பாகிஸ்தானில் இம்ரான் கான் தலைமையிலான அரசுக்கு அளித்த ஆதரவை எம்.கியூ.எம் கட்சி விலக்கிக்கொண்டு எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளதால் ஆட்சியைத் தொடர தேவையான பெரும்பான்மையை அரசு இழந்துள்ளது.

பெரும்பான்மையை நிரூபிக்க 172 இடங்கள் தேவை என்ற நிலையில் எம்.கியூ.எம். விலகியதை அடுத்து ஆளுங்கட்சியின் பலம் 164 ஆக குறைந்தது. அத்துடன், எதிர்க்கட்சிகளின் பலம் 177 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன் தினம் இரவு எதிர்க்கட்சிகளுடன் எம்.கியூ.எம். கட்சி நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து ஆளும் கட்சிக்கான ஆதரவு விலக்கிக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இதன் மீது ஏப்ரல் 3 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இந்நிலையில் 177 உறுப்பினர்களுடன், எதிர்க்கட்சி இப்போது பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்க தேவையான பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ளது. மறுபுறம், ஆளும் கட்சிக்கு 164 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே உள்ளது.



இந்நிலையில் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் பாகிஸ்தான் அரசு கவிழும் நிலை ஏற்படும் எனக் கருதப்படுகிறது. எனினும் ஆட்சியைத் தக்க வைப்பதற்கான தீவிர முயற்சிகளில் இம்ரான் கான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். (அ)

## அணிசேரா நிலைப்பாட்டை ஏற்க உக்ரைன் நிபந்தனை!

கீவ், மார்ச் 31

மேற்கத்திய நாடுகள் தங்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தால், நேட்டோவில் இணையாமல் ரஷ்யா வலியுறுத்தும் அணிசேரா நிலைப்பாட்டை ஏற்க சம்மதம் தெரிவிப்பதாக நேற்று இடம்பெற்ற இஸ்தான்புல் பேச்சுவார்த்தையின்போது உக்ரைன் தெரிவித்துள்ளது.

துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது உக்ரைன் பேச்சுவார்த்தைக் குழு உறுப்பினர் டேவிட் அரகாமியா இதனைக் கூறினார்.

நேட்டோவின் 5 ஆவது சட்ட விதியின் படி, அந்த அமைப்பில் உறுப்பினராக இருக்கும் நாட்டின் மீது யாராவது படையெடுத்தால் தான் அது மற்ற உறுப்பு நாடுகளின் மீதான தாக்குதலுக்கு இணையாகும். அப்போதுதான் நேட்டோ அமைப்பு எதிர்வினையாற்றும்.

இந்த நிலையில், நேட்டோவில் இணையாமலேயே அத்தகைய பாதுகாப்பு உத்தரவாதத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, என்பன வழங்க வேண்டும்.

அத்துடன், ஜேர்மனி, கனடா, இஸ்ரேல், இத்தாலி, போலந்து, துருக்கி ஆகிய நாடுகளும் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று உக்ரைன் கோரி வருகிறது.

அவ்வாறு உத்தரவாதம் கிடைத்தால்தான் ரஷ்யா வலியுறுத்தி வரும் அணிசேரா நிலைப்பாட்டை ஏற்க முடியும் என்று அந்த நாடு தெரிவித்துள்ளது.

அணிசேரா நிலைப்பாட்டை எடுத்தால், நேட்டோவில் இணையும் விருப்பத்தை உக்ரைன் நிரந்தரமாகக் கைவிட வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)




## 2022-2023 நிதியாண்டில் ஆஸியில் அகதிகளின் வருகை அதிகரிக்கும்

கான்பரா, மார்ச் 31

அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயரும் அகதிகளின் எண்ணிக்கை 2022-2023 நிதியாண்டில் 180,000 ஆக அதிகரிக்கும் என நிதிநிலை அறிக்கையில் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக சர்வதேச எல்லைகள் கடந்த பல மாதங்களாக மூடப்பட்டிருந்ததால் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்வோர் எண்ணிக்கை குறைந்திருந்த நிலையில் புதிய நிதியாண்டில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கலாம் என நேற்று வெளியிடப்பட்ட நிதி நிலை அறிக்கையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நோய் காரணமாக ஆண்டுதோறும் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்வோரின் எண்ணிக்கை இரண்டாவது உலகப்போர் காலத்திற்குப் பின்னர் முதற் தடவையாக 2020-21 நிதியாண்டில் பாரியளவில் குறைவடைந்திருந்தது.

எனினும் எல்லைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில் 2022-2023 நிதியாண்டில் குடிபெயர்வோரின் எண்ணிக்கை 180,000 ஆக காணப்படும் எனவும், 2023-24 இல் இந்த எண்ணிக்கை 213,000 ஆக அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்குள் மனிதாபிமான நுழைவிரைவு திட்டத்தின் அடிப்படையில் உள்வாங்கப்படும் அகதிகளின் எண்ணிக்கை, முந்தைய இரண்டு ஆண்டுகளைப் போலவே புதிய ஆண்டிலும் 13,750 ஆக தொடர உள்ளது. எனினும் ஆப்கானிஸ்தான் நாட்டவர்களுக்கு கூடுதல் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும் மக்களுக்கென கூடுதலாக 16,500 இடங்கள் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. இதற்கென 665.9 மில்லியன் டொலர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் நாட்டினருக்கு அடுத்த நான்கு ஆண்டுகளில் 15,000 விசாக்களை அரசு ஒதுக்குவதாகவும், மனிதாபிமான திட்டத்தின்கீழ் 10,000 மற்றும் குடும்ப விசாக்களின்கீழ் 5,000 என இந்த விசாக்கள் ஒதுக்கப்படுவதாகவும் கடந்த ஜனவரி மாதம், குடிவரவு அமைச்சர் அலெக்ஸ் ஹாக் அறிவித்திருந்தார். (அ)

## அமெரிக்காவில் 80 மில்லியனை கடந்தது கொரோனா தொற்று!

நியூயோர்க், மார்ச் 31

அமெரிக்காவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 80 மில்லியனைத் தாண்டியுள்ளதாக ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. நேற்று மதியம் உள்ளூர் நேரம் 12 மணி நிலவரப்படி நாட்டில் உறுதி செய்யப்பட்ட மொத்த தொற்று நோயாளர் தொகை 80,000,546 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், நேற்று முன் தினம் வரை கொரோனா தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 978,102 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் மிக அதிகளவான தொற்று நோயாளர்கள் கலபோர்னியா மாநிலத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். இங்கு இதுவரை 9 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளனர்.

6.7 மில்லியனுக்கும் அதிகமான தொற்று நோயாளர்களுடன் டெக்சாஸ் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து புளோரிடாவில் 5.8 மில்லியன், நியூயோர்க்கில் 4.9 மில்லியனுக்கும் அதிகமான தொற்று நோயாளர்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

மிக அதிகளவான இறப்புகள் மற்றும் தொற்று நோயாளர்களுடன் உலகில் தொற்று நோயால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா உள்ளது.

உலகம் முழுவதும் பதிவான தொற்று நோயாளர்களின் 17 வீதம், மற்றும் உலகளாவிய இறப்புக்களில் 16 வீதமானவை அமெரிக்காவிலேயே பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி அமெரிக்காவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 மில்லியனை எட்டியது. இந்த ஆண்டு ஜனவரி 09 ஆம் திகதி தொற்று நோயாளர் தொகை 60 மில்லியனை தாண்டியது. ஜனவரி 21-ஆம் திகதி 70 மில்லியன் தொற்று நோயாளர் என்ற மோசமான மைல் கல்லை அமெரிக்கா எட்டியது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு





## மகளிர் உலகக் கிண்ணம்: ஆஸி அணி இறுதிக்கு தகுதி!

வெலிங்டன், மார்ச் 31

மேற்கிந்தியத் தீவுகள் அணியை 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மகளிர் உலகக் கிண்ணத்தின் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது அவுஸ்திரேலிய அணி.

வெலிங்டனில் நடைபெற்ற முதல் அரையிறுதிச் சுற்றில் அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதி வருகின்றன. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 45 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 305 ஓட்டங்கள் குவித்தது. மழை காரணமாக ஆட்டம் 45 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. ஆஸ ி. தொடக்க வீராங்கனைகள் ரேச்சர் ஹெய்ன்ஸ/ம் அலிஸா ஹீலியும் முதல் விக்கெட்டுக்கு 32.4 ஓவர்களில் 216 ஓட்டங்களை குவித்தனர்.

அலிஸா ஹீலி 107 பந்துகளில் 1 சிக்ஸர், 17 பௌண்ட்ரிகளுடன் 129 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இது அவருடைய 4ஆவது ஒருநாள் சதமாகும்.

ஆஸி. அணி நிர்ணயித்த இலக்கை விரட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி மிகவும் தடுமாறியது. 37 ஓவர்களில் 148 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அணித் தலைவர் ஸ்ரெபானி ரெய்லர் 48 ஓட்டங்களும் டாட்டின் 34 ஓட்டங்களும் எடுத்தனர்.

மே.இ. தீவுகள் அணியை 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது அவுஸ்திரேலிய அணி. உலகக்கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 7ஆவது முறையாக இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. (ஐ)

### ஐ. பி. எல். இருபது - 20 தொடர்:

# ராஜஸ்தானிடம் வீழ்ந்தது சன்ரைசர்ஸ் ஹைதராபாத்!

புனே, மார்ச் 31

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை 61 ஓட்டங்களால் வெற்றி கொண்டது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ட்ரென்ட் போல்ட், பிரசித் கிருஷ்ணா ஆகிய இருவரின் வேகப் பந்து வீச்சில் தடுமாறிப் போன சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி, ஐ. பி. எல். வரலாற்றில் பவர்பிளேயில் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையை (14 - 3 விக்.) பதிவுசெய்திருந்தது.



ராஜஸ்தான் றோயல்ஸ் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 211 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

மத்திய வரிசை மற்றும் பின் வரிசை வீரர்கள் மூவரின் நிதானமான துடுப்பாட்டங்களின் உதவியுடனேயே இந்த மொத்த எண்ணிக்கையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் பெற்றது. ட்ரென்ட் போல்ட், பிரசித் கிருஷ்ணா, யஸ்வந்த்ர சஹால் ஆகியோரின் பந்துவீச்சுகளில் பெரும் தடுமாற்றம் அடைந்த சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 16ஆவது ஓவரில் 6 விக்கெட்களை இழந்து 78 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. இதில் ரொமாரியோ ஷெப்பர்ட் பெற்ற 24 ஓட்டங்களே அதிகூடிய எண்ணிக்கையாக இருந்தது.

ஆனால், அதன் பின்னர் அதிரடியில் இறங்கிய அய்டன் மார்க்ரம், வாஷிங்டன் சுந்தர் ஆகிய இருவரும் 7ஆவது விக்கெட்டில் 19 பந்துகளில் 55 ஓட்டங்களைப் பகிர்ந்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் ஓரளவு கௌரவமான ஓட்டத்தைப் பெற உதவினர்.

இதில், வாஷிங்டன் சுந்தர் மாத்திரம் 14 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக 40 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் கடைசி 26 பந்துகளில் 71 ஓட்டங்களை குவித்திருந்தது. அய்டன் மார்க்ராம் 41 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார்.

ராஜஸ்தான் பந்துவீச்சில் யஸ்வேந்த்ர சஹால் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் பிரசித் கிருஷ்ணா 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ட்ரென்ட் போல்ட் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 210 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் மொத்தமாக 16 பவுண்ட்றிகளும் 14 சிக்ஸ்களும் அடங்கியிருந்தன. இதன் பிரகாரம் பௌண்ட்ரிகளில் மாத்திரம் 148 ஓட்டங்கள் மொத்த எண்ணிக்கைக்கு சேர்ந்தன. துடுப்பாட்டத்தில் முதல் 5 வீரர்களும் அதிகபட்ச பங்களிப்பை வழங்கியிருந்தனர். ஜோஸ் பட்லர் (35), யஷஸ்வி ஜஸ்வால் (20) ஆகிய இருவரும் பவர்ப்ளேயில் 58 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். 7ஆவது ஓவரின் முதல் பந்தில் ஜஸ்வால் ஆட்டமிழந்த பின்னர் 9ஆவது ஓவரின் முதல் பந்தில் பட்லரும் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து 3ஆவது விக்கெட்டில் இணைந்த அணித் தலைவர் சஞ்சு சாம்சன், தேவ்தத் படிக்கல் ஆகிய இருவரும் 73 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

சாம்சன் 27 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 55 ஓட்டங்களையும் படிக்கல் 29 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 41 ஓட்டங்களையும் குவித்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஷிம்ரன் ஹெட்மியர் 13 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்களையும் ரெயான் பராக் 9 பந்துகளில் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் உம்ரன் மலிக் 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் தங்கராசு நடராஜன் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



## வில்லியம்ஸனுக்கு அபராதம்!

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிராக ஓவர்கள் வீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் சன்ரைசர்ஸ்

அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

புனேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐபிஎல் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத்

அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் 20 ஓவர்களை வீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் சன்ரைசர்ஸ் அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸனுக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 42 இலட்சம் ரூபாய் விதிக்கப்பட்டுள்ளது.

## யோர்க்ஷயர் அணியில் இணைகிறார் திமுத்!

கொழும்பு, மார்ச் 31


இங்கிலாந்தில் நடைபெறவுள்ள பிராந்திய (கவுன்டி) கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரட்ணவை யோர்க்ஷயர் பிராந்திய அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

யோர்க்ஷயர் அணிக்காக நான்கு முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ள திமுத் கருணாரட்ன, மே மாதம் பங்களாதே/க்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணியுடன் இணைந்துகொள்வார்.

இதற்கமைய க்ளொஸ்டர்ஷயர் (ஏப்ரல் 14 - 17), நொதம்ப்டன்ஷயர் (ஏப்ரல் 21- 24), லீட்ஸ் (ஏப்ரல் 28 - மே 1), இசெக்ஸ் (மே 5 - 8) ஆகிய அணிகளுக்கு எதிரான நான்கு போட்டிகளில் விளையாடிய பின்னர் இலங்கை அணியுடன் திமுத் கருணாரட்ன இணைவார்.

பங்களாதேஷுடான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் முடிவடைந்ததும் திமுத் கருணாரட்ன, யோர்க்ஷயர் அணியில் மீண்டும் இணைந்துகொள்வார்.

76 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 5,620 ஓட்டங்களை மொத்தமாக பெற்றுள்ள திமுத் கருணாரட்ன டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ. சி. சியின் தரவரிசையில் தற்போது 6ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## மியாமி ஓப்பன் தொடர் அரையிறுதியில் ஒசாகா

மியாமி, மார்ச் 31

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனையான ஜப்பானின் நயோமி ஒசாகா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பிரபலமான மியாமி ஓப்பன் ரென்னிஸ் அமெரிக்காவின் மியாமி நகரில் நடக்கிறது. இதன் காலிறுதிப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

முதல் போட்டியில் ஜப்பானின் நயோமி ஒசாகா அமெரிக்காவின் கொலின்ஸை எதிர்கொண்டார். வலுவாக தனது ஆட்டத்தை ஆரம்பித்த ஒசாகா 6 - 2, 6 - 1 என்ற செற்களில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

அண்மைக்காலமாக தொடர் தோல்விகளை பெற்று வரும் ஒசாகா இந்தத் தொடரில் அரையிறுதிக்கு முன்னேறியிருப்பது அவரின் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (ஐ)

# எதிர்வரும் சில நாட்களுக்கு மக்கள் வாழ்வது மிக கடினம்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 31

**எதிர்வரும் சில நாட்கள் மக்கள் வாழ்வது மிகவும் கடினமாக இருக்கும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.**

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், “இந்த நிலைமை மேலும் மோசமாகி வருகிறது. இதற்கு தீர்வு காண எந்த நிறுவனமும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

நிதி நெருக்கடியால் இந்த மின் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அரசாங்க நிறுவனங்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் இந்த சூழ்நிலையை நிர்வகிக்க நாங்கள் அரசாங்கத்திற்கு பரிந்துரைத்தோம்.

அடுத்த சில நாட்கள் பொது மக்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். சதந்திர வர்த்தக வலயங்களுக்கு மின்சாரம் வழங்கவும் நாங்கள் எங்களால் முடிந்தவரை முயற்சி செய்கிறோம் - என்றார். (அ)

# மரக்கறி விலை பெரும் வீழ்ச்சி



கொழும்பு, மார்ச் 31

நாட்டில் தற்போது நில வும் எரிபொருள் நெருக்கடி காரணமாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் மொத்த விலை பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

கடந்த வாரம் 300 ரூபாவை அண்மித்த ஒரு கிலோ போஞ்சியின் விலையானது நேற்று 100 ரூபாவாக வீழ்ச்சியடைந்ததுடன் ஒரு கிலோ தக்காளியின் விலை 60 ரூபா வாகவும், கரட் 110 ரூபாவாகவும், சிவப்பு உருளைக்கிழங்கு 100 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளது.

குறிப்பாக எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு காய்கறிகள் கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகள் தற்போது வருகை தராமையே காய்கறி விலை வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ)

# கோட்டாபய அரசுக்கு எதிராக ஒரே நாளில் 150 போராட்டங்கள்!

கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக ஒரே நாளில் - ஒரே நேரத்தில் 150 போராட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 07ஆம் திகதி தேர்தல் தொகுதிகள் வாரியாக இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இந்தபோராட்டங்களில் பங்கேற்று, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர். (அ)

# எரிவாயு விலையை மீளவும் அதிகரிக்க அனுமதி கோரியது லிட்ரோ நிறுவனம்!

கொழும்பு, மார்ச் 31

எரிவாயு விலையை மீண்டும் அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு சிலிண்டருக்கான விலை அதிகரிப்பது குறித்து அமைச்சரவை இது வரை அனுமதி வழங்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு தற்போது அதிகாரம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே விலை அதிகரிப்பதற்கான அனுமதியை அமைச்சரவையே வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# மின்சாரம், எரிபொருள், எரிவாயுவுக்கு மேலதிகமாக தண்ணீரும் தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 31

மின்சாரம், எரிபொருள், எரிவாயுவுக்கு மேலதிகமாக நீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரியாத் பந்துவிக்ரம இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

களனி கங்கையின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளதால் தற்போது மணல் மூட்டைகளை இட்டு நிரப்பி நீரை சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வறட்சியான காலநிலை காரணமாக நீரை விநியோகிப்பதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வருடாந்தம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இவ்வாறான நிலை காணப்படும் எனவும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரியாத் பந்துவிக்ரம குறிப்பிட்டார்.

அதனை சிறந்த வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு மக்களின் உதவியும் அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

பயிர்ச்செய்கைகள், வாகனங்களை சுத்திகரிப்பது மற்றும் ஏனைய அத்தியாவசியமற்ற செயற்பாடுகளுக்காக குடிநீரை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரியாத் பந்து விக்ரம கோரிக்கை விடுத்தார்.

அதேநேரம், எதிர்பார்க்கப்பட்ட மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறாமையினால், மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாட்டில் ஆடை விலை சடுதியாக உயர்ந்தது

கொழும்பு, மார்ச் 31

தைத்த ஆடைகளின் விலைகள் சுமார் 40 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக அகில இலங்கை சிறு கைத்தொழிலாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நிலுக்ஸ குமார தெரிவித்தார்.

மின்சாரத் தடை, டொலர் பற்றாக்குறை மற்றும் மூலப் பொருள் தட்டுப்பாடு காரணமாக இவ்வாறு தைத்த ஆடைகளின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளது.

குறிப்பாக மஹரகம பமுனுவ பகுதியில் புத்தாண்டு காலத்தில் 200, 300 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட தைத்த ஆடைகள் தற்பொழுது 800 முதல் 1000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யப்படும் மூலப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

600 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட நூலை நேற்று 1800 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சிறு ஆடை உற்பத்தி நிலையங்கள் மின்சாரத் தடையினால் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மின்பிறப்பாக்கி பழுதடைந்தமையால் சாவகச்சேரி வைத்தியசாலை இருளில்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மின்வெட்டு நேரம் ஆதார வைத்தியசாலையில் பொருத்தப்பட்ட மின்பிறப்பாக்கி பழுதுபட்டமையால் வைத்தியசாலை முழுவதும் இருளில் மூழ்கியது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது

நாட்டில் நேர அட்டவணையின் பிரகாரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாறான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மின் துண்டிப்பு ஏற்பட்ட நிலையில் அங்கு பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியும் இயங்க மறுத்தது.

இதனால் தொலைபேசி வெளிச்சத்தின் மூலம் சேவைகள் இடம்பெற்றுள்ளன.



வடமாகாண சுகாதார சேவைகள் தொடர்பில் பல வேறு விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில், இவ்வாறு வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கி உரிய முறையில் பராமரிக்கப்படாததன் விளைவே இவ்வாறான தடங்கல்கள் ஏற்படுவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் குற்றஞ்சாட்டின. (அ)

# பொலிஸாரின் மீது தாக்குதல் 2 பெண்கள் உட்பட ஐவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 31

நீதிமன்ற பிடிவிறாந்தை நடைமுறைப்படுத்தச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் 2 பெண்கள் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யோகபுரம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நீதிமன்ற வழக்கு விசாரணைக்குச் செல்லாததால் நீதிமன்றினால் அவர்களுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்தினை நடைமுறைப்படுத்தி அவர்களைக் கைது செய்வதற்காக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் யோகபுரம் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

அதன்போது அங்கு நின்றவர்கள் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக நடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இரு பெண்கள் உள்ளிட்ட ஐவரைக் கைது செய்துள்ளனர். (அ)

## பாராளுமன்றத்...

கலைக்க முடியும். எனினும், பாராளு மன்றத்தில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டால் நாளை வேண்டுமானாலும் அதனை கலைக்க முடி யும் எனவும் உதய கம் மன்பில சுட்டிக்காட்டி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் கடும் பொருளாதார நெருக் கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதிலிருந்து மீள்வதற்கான வேலைத் திட்டத்தை அரசு முன்வைக்கவில்லை. ஐக்கிய மக் கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகிய னவும் தீர்வு திட்டத்தை சமர்ப்பிக்க வில்லை.

முழு நாடும் சரியான பாதைக்கு எனும் வேலைத்திட்டத்தை நாமே முன் வைத்துள்ளோம். சரி, எதிரணிகளை விடு வோம், தீர்வு திட்டத்தை முன்வைக்க வேண்டியது அரசின் கடப்பாடாகும். அதனை செய்யாவிட்டால் அரசு பெயில் என்றே புலப்படும்.

நாட்டு மக்களை சாகடிக்கும் இந்த அரசுக்கு ஆட்சியை தொடர்ந்து முன் னெடுக்க அனுமதி வழங்குவதா அல்லது பாராளுமன்றத் தேர்தலுக்கு சென்று நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கக் கூடிய தரப்புக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குவதா என்பது தொடர்பில் தீர்மா னிக்கும் உரிமை மக்களுக்கே இருக்கின் றது. அதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

இந்த அரசு வசம் தற்போது 124 ஆச னங்களே தற்போது உள்ளன. அதில் 12 பேர் ஆதரவு வழங்கினால் அரசின் சாதா ரண பெரும்பான்மை இல்லாமல் போகும். சிலவேளை வரப்பிரசாதங் களுக்காக எமது அணியில் உள்ள சிலர் முடிவை மாற்றலாம். ஏனெனில் அரசிய லில் எதுவும் நடக்கலாம். எனவே .12 என்ற இந்த இலக்கை அடைய நாம் 36 பேரை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். அதற்கு சிறிது காலம் வேண் டும்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை மே மாதம் வரும்போது உக்கிரமடையும். அப்போது மக்களே பாராளுமன்றத்தை கலைக்குமாறு கோரு வார்கள். அப்போது பாராளுமன்றத்தை கலைக்கும் யோசனையை முன்வைக்க எதிர்பார்க்கின்றோம்.

அரசமைப்பின் பிரகாரம் இரண்டரை வருடங்களுக்கு பிறகே ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். ஆனால் பாராளுமன்றம் நினைத்தால், நாளை வேண்டுமானாலும் தன்னை கலைத்துக்கொள்ள முடியும். இந்த யோசனையை நிறைவேற்றிக்கொள்வ தற்கு சாதாரண பெரும்பான்மையே (113 ஆசனங்கள்) போதும். அதாவது 113 உம் தேவையில்லை.

வாக்கெடுப்பில் பங்கேற்கும் உறுப்பினர்களில் பெரும்பாலானவர் களின் ஆதரவு இருந்தால் போதும். அதாவது 20 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்று 11 பேர் ஆதரித்தால் அந்த இலக்கை அடையலாம்.

அதேவேளை, இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றம் வருவ தை தடை செய்வதற்கான அரச மைப்பு திருத்தத்தை நான் அடுத்த மாதம் முன் வைப்பேன். தனிநபர் சட்டமூலமாக இது முன்வைக்கப்படும்.

இரட்டை குடியுரிமை உடையவர்கள் நீதிபதிகள், தூதுவர்கள் மற்றும் அரச நிர்வாக சேவையில் உயர் பதவிகளை வகிப்பதற்கு தடை செய்யுமாறு இதன் மூலம் கோரப்படும் - என்றார். (அ)

## இது அரசியல்...

வாழும் ஒவ்வோர் உயிரினமும் நீரை நம்பித்தான் வாழ்கின்றன. தண்ணீர் நம் வாழ்வின் அடிப்படை. நாம் பின்னோக் கிச் செல்லும்போது, உலகில் உள்ள ஒவ் வொரு நாகரீகமும் நீரைக் கொண்டே உருவாகிறது. நம் நாட்டுக்கும் அப்படித் தான். பழங்காலத்திலிருந்தே, இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான ஒவ்வொரு அடியிலும் விவசாயமும் நீர்ப்பாசனமும் பின்னிப்பிணைந்துள் ளன.

அந்தக் காலத்தில் கிராமம், விகாரை, குளம், தாதுகோபம் என்ற கருத்துதான் நமது கலாச்சாரத்தின் அடிப்படையாக இருந்தது. மேம்பட்ட நீர்ப்பாசனத்தின் மூலம் நாட்டில் விவசாய மறுமலர்ச் சியை ஏற்படுத்துவதே இவை அனைத் தின் இறுதி நோக்கமாக இருந்தது.

தேசிய உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதி பதி செயலணியும் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கமையவே 5,000 கிராமப்புற சிறு நீர்ப்பாசன மற்றும் குடிநீர் அமைப்புகளை மீண்டும் செயல்படுத் துவதற்கான திட்டத்தை எங்கள் அரசு ஆரம்பித்துள்ளது.

இன்று நாம் மிகவும் சிரமப்படுகி றோம். ஒரு நாடாக நாம் ஒரு தொற்று நோய்க்கு முகங்கொடுத்து வருவதுடன், வரலாற்றில் மிகவும் சவாலான நேரத்தை எதிர்கொள்கிறோம். உள்ளூர்வாதத்துக்கு முன்னுரிமை அளிக்கும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமே எங்கள் நோக் கம். இந்த அமைப்பு சீரமைக்கப்படும் போது, கிராமப்புற மக்கள் விவசாயத் தில் படும் பல சிரமங்கள் நீங்கும். அதுமட்டுமின்றி, குளங்கள் புனரமைக் கப்படும்போது, அது பல தொழில்க ளுக்கு இடமளிக்கும். நன்னீர் மீன்பிடி தொழிலில் கூட ஈடுபடுவதற்கு ஏற்ற சூழல் உள்ளது.

இத்திட்டம் யதார்த்தமாகும்போது விவசாய பொருளாதாரத்தை மட்டுமன்றி கிராமியப் பொருளாதாரத்தையும் பலப் படுத்த முடியும். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை நாளுக்கு நாள் வலுப் படுத்துவதே எமது தேவை. இன்று மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நாம் அறிவோம். இவை நமக்குத் தெரியாதா? அல்லது அறிந்தும் அறியாதது போன்று உள்ளார்களா என்று சிலர் கேட்கிறார்கள். அதனால் தான் அனைத்துக் கட்சி மாநாட்டை கூட்டி நாட்டைப் பற்றி சிந்திக்கவும், அனைவரின் கருத்துக்களை கேட்ட றிந்து, இந்த நிலையிலிருந்து மீண்டெழு வதற்கான தளமொன்றை நிர்மாணித் தோம்.

கோவிட் தொற்று நம்மால் உரு வாக்கப்பட்டது அல்ல. நாங்களே அதனை செய்தோம் என்று மக்களைத் தூண்டிவிட சிலர் முயற்சிப்பதைப் பார்த்தேன். எதிர்கட்சியில் இருந்தாலும் நல்ல யதார்த்தமான யோசனைகளை முன்வைத்தால் ஏற்கத் தயாராக உள் ளோம். இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. ஒவ்வொருவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் இது. எனவே, அனைத்துக் கட்சி மாநாட் டில் கலந்து கொள்ளாதவர்களை அடுத்த முறை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம் - என்றார். (ஐ)

## 2 இலட்சம்...

எனினும், தங்கத்திற்கு கடும் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு தங்கம் இல்லை என்றும் வர்த்தகர்கள் கூறு கின்றனர்.

மேலும், வாடிக்கையாளர்களுக்கு தேவையாயின் அவர்கள் வழங்கும் தங்கத்தைக் கொண்டு மாத்திரம் தங்க நகைகளை தயாரிக்க முடியும் என்றும் தெரிவித்தனர். (ஐ)

## வாசகர்களுக்கு...!

யாத இந்நிலையில், நாளை ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஈழநாடு பத்திரிகை அதேபக்கங்களுடன் 10 ரூபாய் அதிகரிக் கப்பட்டு 30 ரூபாயாக விற்பனையாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தரு கிறோம். இதனால், வாசகர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு மன்னிப்பும் கோருகிறோம்.

- நிர்வாகம்.

## இன்று 13 மணி...

ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களில் நள்ளிரவு 12 மணி முதல்அதிகாலை 3 மணி வரை யும், காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், பிற்பகல் 4 மணி முதல் இரவு 10 மணி வரையும் மின்வெட்டு நடைமுறையிலிருக்கும். இதேபோல, பி, கியூ, ஆர், எஸ் வலயங்களில் அதிகாலை 3 மணி தொடக்கம் காலை 6 மணி வரையும், நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும், மாலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரையும் மின்வெட்டு அமுலில் இருக்கும். வடக்கு மாகாணம் முழுமையாக இந்த வலயங் களுக்குள் அடங்குகிறது.

இதேவேளை, ஜி, எச், ஐ, ஜே, கே, எல், வலயங்களில் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 3 மணி வரையும், காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், பிற்பகல் 4 மணி முதல் இரவு 10 மணி வரையும் மின்வெட்டு நடைமுறையிலி ருக்கும். இதேபோன்று, ஏ, பி, சி, டி, ஈ, எவ் வலயங்களில் அதிகாலை 3 மணி தொடக்கம் காலை 6 மணி வரையும், நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும், மாலை 6 மணி தொடக் கம் நள்ளிரவு 12 மணி வரையும் மின் வெட்டு அமுலில் இருக்கும்.

இதேசமயம், வெள்ளிக்கிழமை முதல் 15 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப் படும் என்று மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## முகக்கவசத்தை...

தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட வர்களின் எண்ணிக்கை 54 சதவீத மாகவே காணப்படுகிறது என தெரிவித்துள்ள அவர், இந்த எண் ணிக்கை தொடர்பில் எம்மால் திருப்திப் பட முடியாது என்றார்.

மேலும் எந்தெந்த பொது இடங் களுக்கு தடுப்பூசி அட்டையை கொண்டு செல்ல வேண்டும் என்பதை எதிர்வரும் நாள்களில் வர்த்தமானி ஊடாக அறிவிப் பதாகத் தெரிவித்த அவர், ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு பின்னர், பொது இடங் களுக்கு செல்ல வேண்டுமாயின் இலங் கையர்கள் முழுமையாக கொரோனா தடுப்பூசிகளை செலுத்தியிருப்பது அவசி யம் - என்றும் கூறினார். (ஐ)

## 15 மணித்தியாலம்...

தற்போது வரையில், நீர் மின் உற்பத்தியில், சுமார் 1,200 மெகா வாற்ஸ் மின்சாரத்தை வழங்கக்கூடிய இயலுமை இருக்கின்றபோதிலும், தண்ணீர் இன்மை யால், மதிய நேரத்தில் 300 மெகா வாற்ஸ் மின்சாரத்தையும், இரவு நேரத்தில் 700 மெகாவாற்ஸ் மின்சாரத்தையும் மாத் திரமே வழங்கமுடியும்.

அதேநேரம், எரிபொருளில் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களில், 1, 700 மெகாவாற்ஸ் அளவில் கொள்ளளவு இருக்கின்றபோதிலும், எரிபொருள் இன் மையால், 1,000 மெகா வாற்ஸ் மின் சாரத்தை மாத்திரமே வழங்க முடியும். ஆனால், இரவு நேரத்தில் மாத்திரம் 1, 800 மெகா வாற்ஸ் மின்சாரத்துக்கான கேள்வி உள்ளது.

எனவே, விநியோகத்தில் நிச்சயமாக வீழ்ச்சியுள்ளது தற்போது வரையில், பாஜ் மின்னுற்பத்தி நிலையத்திற்கும், களனிதிஸ்ஸ கூட்டு மின்னுற்பத்தி நிலையத்திற்கும், 1,500 மெட்ரிக் தொன் எரிபொருள் மாத்திரமே கிடைத்துள் ளது. எரிபொருளில் இயங்கும் வேறு எந்தவொரு மின்னுற்பத்தி நிலையத் திற்கும், எரிபொருள் கிடைக்கவில்லை. நாம் அறிந்தவரை இன்றும் (நேற்றும்) நாளையும் (இன்றும்)கூட எரிபொருள் கிடைக்காது.

தற்போது 10 மணி நேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், வரும் நாட்களில், 12 மணித்தி யாலங்களாகவும், 15 மணித்தியாலங்களா கவும் அதிகரிக்க வேண்டி ஏற்படக் கூடும். எனவே, மின்சாரம் விநியோகிக் கப்படும் நேரத்தைக் கூறுவது சிறந்த தாகும்.

விரைவாக எரிபொருளைப் பெற்றுக் கொடுத்தால், மின்சாரம் துண்டிக்கப் படும் நேரத்தை இயன்றளவு குறைக்க முடியும் என அரசாங்கத்திற்கு அறியப் படுத்தியுள்ளதாகவும் மேலும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## தமிழக...

திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித் தவை வருமாறு,

இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் தொடர்கின்றன. நாங்கள் தொடர்ச்சியாக பேச்சுக்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்திய போதும் அத்துமீறல் குறையவில்லை. கடற்றொழில் அமைச்சரும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வட பகுதி மீனவர்கள் என்ற வகை யில் இந்திய - தமிழக மீனவர்களுடன் எந்த ஒரு பேச்சிலும் கலந்து கொள்ளப் போவதில்லை. - என்றார். (ஐ)

## முறிகண்டி...

பயணித்த சொகுசு பஸ் மோதியுள்ளது.

இந்த விபத்தில் உழவு இயந்திரம் பலத்த சேதங் களுக்குள்ளாகி தடம் புரண்டுள்ளது. இதன் போது உழவு இயந்திரத்தைச் செலுத்திய சாரதி சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்தில் மணவாளன்பட்டமுறிப்பு பகுதியைச் சேர்ந்த ஜெயராம் பிரசாத் (வயது-35) என்ற இளம் குடும்பத்தர் சம்பவ இடத் தில் உயிரிழந்துள்ளார். இவர் புதுக்குடி யிருப்பு பிரதேச சபையில் சாரதியாக பணிக்கமர்த்தப்பட்டுள்ள அதேவேளை, படுகாயம் அடைந்த மற்றைய மூவரும் சுகாதார சிற்றூழியர்களாவர்.

படுகாயமடைந்த மூவரும் அவசர அழைப்பு நோயாளர்காவு வண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத் துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவரின் உடல் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற நேரத்திலிருந்து நீண்ட நேரத்தின் பின்னர் காயமடைந்த வர்களை அழைத்துச் செல்ல நோயாளர் காவு வண்டி வருகை தந்தமை தொடர் பில் மக்கள் விசனம் தெரிவித்தனர். (அ)

## பொருளாதார...

எதிர்காலம் தெளிவாகவும் வலுவாகவும் இருப்பதாக ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் நடக்கும் பிம்ஸ்ரெக் மாநாட்டில் நேற்று மெய் நிகர் வழியே உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, பிராந்தியத்தில் வர்த் தகம் மற்றும் முதலீட்டை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண் டும். ஏறக்குறைய இரண்டு வருட இடை வெளிக்குப் பிறகு புத்துயிர் பெற்ற சுற்றுலா கைத்தொழிலானது பிம்ஸ்ரெக் நாடுகளுக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கி றது. எனவே சுற்றுலா கைத்தொழில் தொடர்பில் பிம்ஸ்ரெக் நிகழ்ச்சி நிரலில் முக்கிய அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

வங்காள விரிகுடா பிராந்தியம் உலக உறவுகளுக்கும் வர்த்தகத்திற்கும் மிகவும் முக்கியமானது. இதன் மூலம் சர்வதேச கப்பல் பாதைகள் உலகப் பொருளா தாரத்தின் இதயம் செயல்படுவதற்கு உதவும். கடல் பிராந்தியத்தைப் போன்று நாடுகளுக்கும் ஏற்படும் அச்சுறுத்தல் களைத் தணிக்க கடல்சார் நாடுகள் ஒன்றி ணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம். பிம்ஸ்ரெக் உறுப்பு நாடுகளுக் கிடையிலான புலனாய்வுத் தகவல் பகிர்வு மற்றும் அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்து ழைப்பின் அவசியம் என்றும் அவர் கூறி னார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 12 - 1934



மறைவு 25 - 03 - 2022

### திருமதி ராஜேஸ்வரி சண்முகராஜா

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், லண்டன் Wimbledon ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ராஜேஸ்வரி சண்முகராஜா அவர்கள் 25.03.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் – சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை – செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற ஐயாத்துரை சண்முகராஜா (இளைப்பாறிய அரசாங்க அதிபர்–கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ராஜ்குமார், உதயகுமார், Dr.ஹிமா(வனஜா), பிரதீப்குமார், சுரேஷ்குமார், யசோதரா, லாவண்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், யசோதா, Dr.புவிநாதன், தபோதினி, சசீதை, சிவகுமார், Dr.சத்தியேந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிஷாந்தன், அபிராமி, னுச.சாய்ராஜ், ராம்ராஜ், சுவேதா, அம்ரிதா, ஆஸ்மி, சுபர்னா, சஞ்சனா, கணன், அரன், நீலா, மீனா ஆகியோரின் அன்புப் பேத்தியும்,காலஞ்சென்ற இரட்னேஸ்வரி, நிர்மலாதேவி, பரமேஸ்வரி, சிவசுப்ரமணியம், காலஞ்சென்ற லோகநாதன், மனோரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பாஸ்கரன், காலஞ்சென்ற சண்முகநாதன், நடராசா, ஜீவா, யோகநாதன், காலஞ்சென்றவர்களான நடராசா, கனகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

*கிரியை*
Sunday, 03 Apr 2022 7:30 AM - 10:15 AM
Richard Challoner School Xavier centre School House Richard Challoner, Manor Dr N, New Malden KT3 5PE, United Kingdom

*தகனம்*
Sunday, 03 Apr 2022 11:00 AM - 11:45 AM
Lambeth Crematorium 29 Blackshaw Rd, London SW17 0DH, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உதயகுமார் - மகன்**
Mobile : +447515539519
**Dr.ஹிமா(வனஜா) - மகள்**
Mobile : +447903583578
**பிரதீப் - மகன்**
Mobile : +447887761145
**சுரேஷ் - மகன்**
Mobile : +447956802320
**லாவண்யா - மகள்**
Mobile : +447769653926
**Dr.புவி - மருமகன்**
Mobile : +447984924502
**குமார் - மருமகன்**
Mobile : +447780601575
**Dr.சத்தியன் - மருமகன்**
Mobile : +447808924800

தகவல் :
**குடும்பத்தினர்.**




# கோவிட் பலி 16,474

*கொழும்பு, மார்ச் 31*

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 4 பேர் உயிரிழந்னர் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த வர்களில் 4 ஆண்கள் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 60 வயதுக்கு மேற் பட்டவர்களில் 04 ஆண்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 474 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலுக்குப் பிரதமர் பதவி; அவரே உருவாக்கிய செய்தி!

### கூறுகின்றார் மரிக்கார் எம்.பி.

*கொழும்பு, மார்ச் 31*

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதமர் பதவி வழங்கப்பட உள்ளதாக வெளியான செய்தி அவராலேயே உருவாக்கப்பட்ட செய்தி என ஐக்கிய மக்கள் மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ரணிலை பிரதமராக நியமிக்க உள்ளதாக வெளியான செய்திகள் முற்று முழுதான பொய்ச் செய்தி என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஒரு பாராளுமன்ற ஆசனம் கொண்ட கட்சிக்கு பிரதமர் பதவியை வழங்க முடியாது.

இடதுசாரி கொள்கைகளை உடைய விமல், வாசு, உதய கம்மன்பில போன்றவர்களுடன் ரணிலுக்கு இணைந்து செயற்பட முடியாது.

மக்களை திசை திருப்பும் வகையில் பிரதமர் பதவிக்கு ரணில் நியமிக்கப்பட உள்ளதாக சமூக ஊடகங்களில் போலிச் செய்திகள் வெளியிடுகின்றன. அவ்வாறான செய்திகளை உருவாக்குவதில் ரணில் வல்லவர்.

ரணிலின் அரசியல் மற்றும் பொருளாதார அறிவினைக் கொண்டு பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது-என்றார். (அ)



## கட்டுகஸ்தோட்டை தீ; தாயும் உயிரிழப்பு!

*கொழும்பு, மார்ச் 31*

கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பலத்த எரிகாயங் களுடன் நிலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி மேற்படி பகுதியில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தந்தை, மகள், மகளின் காத லன் எனக் கூறப்படும் நபர் உள்ளிட்ட மூவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பலியாகியிருந்தனர்.

இவ்விபத்தில் சிக்கி பலத்த காயங் களுக்கு உள்ளான பெண்ணின் தாய், காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்தார் என பொலி ஸார் தெரிவித்தனர்.

தமது வீட்டுக்கு வந்த மகளின் காதலன் எனக்கூறப்படும் நபர், வீட்டின் தன்னையும் தனது கணவர் மற்றும் மகளை வீட்டுக்குள் வைத்து பூட்டிக் கொண்டு தீ வைத்துக்கொண்டதுடன், தமக்கு தீ வைத்ததாக மேற்படி தாய் மரண வாக்குமூலம் அளித்திருந்தார்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 11 - 1956



மறைவு 27 - 03 - 2022

### திருமதி நகுலேஸ்வரி சர்வானந்தன்

யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட நகுலேஸ்வரி சர்வானந்தன் அவர்கள் 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா – அன்னைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி – சதாசிவம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சர்வானந்தன் சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும்,சேதுராஜா, சிவராஜா, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், நாகராஜேஸ்வரி, புஸ்பவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சூர்யகுமாரி, சொர்ணகுமாரி, இந்திராணி, காலஞ்சென்ற கரன்சிங், ராசலிங்கம், விமலாதேவி அருந்தவநாதன், உதயகுமாரி குணசேகரன், மனோகரன் தேவகி, இலங்கைநேசன் றஜனி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,நந்தனன், செந்துரு, கஜன் ஆகியோரின் அன்பு சித்தியும்,சௌமியா, கஜானி, கிருஷன், பிரணவன், பிரணியா, பிரியாணா, இலக்கியன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும்,துளசிகன், மிதுஷன், லஷ்மன், சுபியா, ஷயேஸ், சதீஷ், அம்புயா, ஆர்த்தி கமலகீதன், திவாகர், கிருஷாந்தி, காலஞ்சென்ற நித்யா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

*பார்வைக்கு*
Wednesday, 30 Mar 2022 5:00 PM - 9:00 PM
Thursday, 31 Mar 2022 3:00 PM - 4:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Thursday, 31 Mar 2022 4:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்*
Thursday, 31 Mar 2022 6:00 PM
Highland Hills Funeral Home & Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சர்வானந்தன் - கணவர்**
Mobile : +14372405152
**திவாகர் - மருமகன்**
Mobile : +14167160702
**சிவராஜா - மகன்**
Mobile : +14169198563
**ராஜேஸ்வரி - சகோதரி**
Mobile : +33950537655
**சொர்ணகுமாரி - மைத்துனி**
Mobile : +16478578563
**மனோகரன் - மைத்துனர்**
Mobile : +16472979313
**நேசன் - மைத்துனர்**
Mobile : +14164094268
**விமலாதேவி - மைத்துனி**
Mobile : +16477403997
**உதயகுமாரி - மைத்துனி**
Mobile : +16477402408

தகவல் :
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.